
தென்னகத்

# தலைவன்

ஆசிரியர் : தினகரன்

மலர் 1 | 3—4—63 | தி. மு. கழக வார ஏடு | விலை 16 காசு | இதழ் 23




"பெண்களுக்குத் தங்க நகையே தேவையில்லை. என் காலத்தில் நான் எல்லாவற்றையும் வாங்கிவிடுவேன். அதனால் ஏற்படும் எதிர்ப்புகளை சந்திக்க நான் தயாராக இருக்கிறேன்'' என்று பேசியுள்ளார் நிதியமைச்சர் மொரார்ஜி தேசாய்.

# கட்சிமுத்திரையுடன்கன்னியர்வேட்டை!

## சாட்சி வேண்டுமா? ஜடங்களே சொல்லுங்கள்!

## காட்சி தரக் காத்திருக்கிறார்! ‘காதரைன்’ அம்மையார்!

தமிழ் நாட்டுக் கம்யூனிஸ்டுகள் தங்களைத் தியாகிகள் என்றும், தேசப் பற்றுள்ளவர்கள் என்றும், பலன் காணாத பாட்டாளிகள் என்றும், வர்க்கப் பரம்பரையென்றும் பட்டங்கள் கொள்வதில் எப்போதும் தவறமாட்டார்கள்.

ஆயிரக்கணக்கில் நாச வேலைகளுக்காகவே பிடிபட்டவர்கள் அரசியல் கைதிகள் என்று அறிக்கை வெளியிட்டுக்கொண்டார்கள். குமாரசாமி ராஜாவின் சர்க்கார் குருட்டுக் கட்சியின் திருட்டு வேலைகளையும் மருட்டும் ஓலைகளையும் மதித்தனர்.

சிறைகளுக்குள்ளே எல்லா வகையான வசதிகளைக்கொடுத்தாலும் வஞ்சம் தீர்த்துக்கொள்பவர்களைப் போல் ஆயுதந் தாங்கிய போராட்டங்களைத் தவறாமல் நடத்தினர். சிறைக்குள் ஓர் கலகம் செய்துவிட்டு, கொடுமைகள் நடந்துவிட்டதாக அறிக்கைகளை வெளியிடுவார்கள்.

சிறைகளுக்குள்ளே அதிகாரிகளைத் தாக்குவது முகங்களைக் கிழிப்பது முகத்திலே உமிழ்வது முதுகிலே தட்டுகளை எறிவது இப்படி எத்தனையோ ஸ்டாலின் வேலைகள்! மர்ம நிலையை கசக்குவது போன்ற கசாப்பு வேலைகள்!

ஆயிரம் பேர்கள் 50 போலீசாரைச் சூழ்ந்துகொண்டு விரட்டுவது, சிறை மதிலேறி வெளியே குதித்து ஓடுவது இதுபோன்ற புனிதச் செயல்கள் இலட்சிய வாதிகளின் இணையற்ற பெருமை யாகும். இவைகளை யெல்லாம் மேடையிலே சொல்வதற்கும் பாப்பா சுந்தரிகளைப் போன்ற பாவைகளுக்குத் தெரியவில்லை. அன்னை லட்சுமியிலிருந்து ஜானகிகள் வரை எத்தனையோ ஜாலப் பேச்சுக்கள் ஜாடைகாட்டும் பேச்சுக்கள் கழுத்தறுப்புக் கட்சியின் மேடைகளிலேயிருந்து வேகமாகத் தரப்படுகின்றன. மூக்கானந்தங்களும் புடவை திருடிய காந்தன்களும் சந்திர மண்டலத்துக்குத் தாவிக் குதிக்கும் போது பழைய செய்திகளைப் பார்க்கட்டும்.

கழகக் கூட்டம் நடைபெறும் இடம் சவுரிபாளையமானாலும் சத்திரப்பட்டியானாலும் கமுசிகாபுரமானாலும் சண்டியர்கள் கழுத்தறுப்புக் கருவிகளுடன் கலகத்துக்கு வருகிறார்கள். கட்சியின் அதியற்புத பெருமைகளை மக்களிடத்திலே எப்போதும் சொல்லாதவர்கள் இப்போது நாம் சொல்லும் போது ‘சொறி நாய்கள்’ ‘வெறி நாய்கள்’ என்று முட்டாள்களைப் போல்பேசத்தெரிகிறதே தவிர முறையோடு விவாதிக்கும் முண்டங்களாக இருக்க முடியவில்லை!

மூலைக்கு மூலை கூட்டம் நடக்கும் செய்திகளைத் தினமும் தரும் சகதிப் பத்திரிகையிலே பாருங்கள் முன்னேற்றக் கழகத் தலைவர்களைத் திட்டும் கூட்டங்களாகவே இருப்பதைக் காணலாம். கம்யூனிஸ்டுகளைப் பற்றிக் கழக மேடைகளில் சொல்லப் படும் குற்றச் செய்திகளும் செயல்களும் சான்றுகளைப் பின்னணியாகக் கொண்டவை!




எல்லைப் பிரச்னையில் இந்தியாவைக் காட்டிக் கொடுத்தவர்கள் என்றால் அவர்களின் கல்கத்தாக் கமிட்டித் தீர்மானங்களிலிருந்து புதுடில்லித் தீர்மானங்கள் வரை, எடுத்துச் சொல்லப்படும்கொலைகாரர்கள் என்றால் ஆம்பூர் நடராசனிலிருந்து செண்பகம் சேர்வை வரை வருவார்கள் சாட்சி சொல்ல!

கன்னியரைத் திருடுவதென்றால் கல்யாணியிலிருந்து காதரைன் வரை கணக்குக் கொடுப்போம்! தனிப்பட்ட மனிதர்களின் நடவடிக்கை என்று தள்ள முடியாத முறையிலும், அலட்சியப்படுத்திக் காட்டாத வகையிலும் அவை ஒவ்வொன்றிலும் கட்சி முத்திரை பொறிக்கப்பட்டுள்ளது.

‘தனிப்பட்டோர் செய்த தவறென்று’ தரங்கெட்டவர்கள் தப்பித்துக் கொள்ள முயற்சிக்கிறார்கள்! அவர்கள் எண்ணிப் பார்க்கட்டும். ‘அறிஞர்களும் முட்டாள்களும் என்று எழுதுவதை அரிவாள் கட்சியினர் அனுமதிக்கிறார்கள்- அதுமட்டுமல்ல அதனை வரவேற்கிறார்கள்! நாமும் பொறுமையை இழந்து, முள்ளை முள்ளால் எடுப்பது என்ற முறையில் நாமும் எழுத ஆரம்பித்தால் ஏற்றுக்கொள்வார்களா? அலிப் பையன்கள் அனுமதிப்பார்களா இரவு ராணித் தொண்டர்கள் ‘இருக்கட்டும்’ என்பார்களா? எப்போதும் நாம் இத்தகைய செயலை விரும்பவில்லை.

எல்லாச் செய்திகளுக்கும் துணை செய்த சான்றுகள்தான் இப்போது சிறைகளுக்குள்ளே நடத்தப்பட்ட கலகங்களுக்கும் சான்றுகளாக உள்ளன.

தங்கள் கட்சியை வளர்ப்பதற்குத் தொண்டர்களின் வயிற்றைப் பிசைந்து துட்டு வாங்கும் வீரர்கள், அடி உதைக்குப் பயந்து கொண்டே சந்தாத்தரும் நண்பர்கள், தாங்கள் எந்தக் கட்சியிலே கட்டப்பட்டிருக்கிறோம் என்பதைத் தெரிந்துகொள்ள வேண்டியது மிகவும் அவசியமாகும்.

கம்யூனிஸ்ட் கைதிகள் கடலூர்ச் சிறைக்குள்ளே நடத்திய கலகம் அவர்கள் கண்ணியத்தைக் காட்டிக்கொடுத்துள்ளன.

சிறைகளிலே கொடுமைகள் என்று பெரிய பொய்களைச் சொன்னார்கள் என்பதற்கு, தமிழ் நாட்டுக் கம்யூனிஸ்ட் செயல் வீரர் எம். ஆர். வெங்கட்டராமன் கணக்கே போதும்.

நாச வேலைக் கைதி இவர்! ஆனால் அவருடைய பெண் படிக்கவும் சாப்பிடவும் மாத அலவன்ஸ் ரூ. 20! கேரளக் கம்யூனிஸ்ட் தலைவர் ஏ. கே. கோபாலனின் தாயார் தமக்கை இரு குழந்தைகள் கொண்ட குடும்பத்துக்கு மாத அலவன்ஸ் ரூ. 300! அமைச்சர்களுக்கும் சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் கொடுப்பது போல ஆயிரக் கணக்கிலே தரப்படவேண்டுமாம்.

சிறைக்குள் யிருக்கும் போது காங்கிரஸ் சர்க்கார் மாதா மாதம் அலவன்ஸ் கொடுத்தது. அதை வாங்கிப் புசித்தோம் என்று என்றைக்காவது எந்தத் தலைவராவது எந்தப் பெண்ணாவது எந்தக் கைதியாவது பொதுமன்றத்திலே சொன்னதுண்டா? இவைகளை மறைத்துவிட்டுத்தான் கைதிகளின் போராட்டங்கள் நடைபெற்றன. செய்யக்கூடாத குற்றங்களை யெல்லாம் செய்து விட்டு, “ரத்தம்! ரத்தம்! சிறைகளுக்குள்ளும் பெருக்கெடுக்கிறது ரத்தம்!” “காங்கிரஸ் நாஜிகளின் வெறியாட்டம்” என்று ‘வீரமுழக்கத்தையும்’ கம்யூனிஸ்டுகளே முதலில் கத்துவார்கள்! ரத்தக்கறை படிந்த ஆட்சியின் மீது நம்பிக்கையில்லை யென்று சொன்னவர்கள்தான் இன்று நேரு சர்க்காரைக் காப்பாற்றுவதற்காக இடைத்தேர்தலுக்கே போட்டியிடாமல் அரசியல் விதவைகளாக நிற்கிறார்கள்!

(8-ம் பக்கம் பார்க்க)



### கோவைமா நகரில் கூலிகளின் பேயாட்டம்! கூடலரசன் மீது கல்லெறிந்தனர்.

கோவை 10-வது வட்டார தி. மு. க. சார்பில் 17-3-63.ல் ஓர் பொதுக்கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் தோழர் கூடலரசன் கலந்துகொண்டார். இக்கூட்டத்தை நடைபெறவிடாமல் செய்ய முன்கூட்டியே கம்யூனிஸ்ட் காலிகள் விளம்பரத் தட்டிகளைப் பிய்த்தும் தோழர்களை மிரட்டியும் வந்தனர். இதனால் போலீஸ் பாதுகாப்புடன் கூட்டம் நடந்தும் இடை இடையே கூலிகள் கற்களை வீசியும் கூச்சலிட்டும் கூட்டத்தைக் கலைக்க முயன்றனர்.

கூடலரசன் பேசிக் கொண்டிருக்கும்பொழுது அவர் மீது கல் ஒன்று வந்து விழுந்தது. கழகத் தோழர் அய்யாச்சாமி என்பவர் காயமடைந்தார். ஆயினும் பொது மக்கள் ஒத்துழைப்புடன் கூட்டம் வெற்றிகரமாக முடிந்தது. “கூடலரசன் கம்யூனிஸ்டுகளின் அந்தரங்கங்களைப் புட்டுப்புட்டு வைப்பதால் அவர்கள் ஆத்திரங்கொண்டு கல்லெறியும் இழிவான வேலையில் ஈடுபட்டிருக்கின்றனர். இது அநாகரிகச் செயல்” என்று மக்கள் பேசிக் கொண்டு கலைந்தனர்.




அடுத்த இதழில்...

படிக்கத்தவருதீர்கள்-

அலமேலு அப்பாத்துரை எழுதும்

## " அண்ணாவுடன் இருபத்தி மூன்று நாட்கள் "

டெல்லி சுற்றுப்பயணம் பற்றிய சுவையான கட்டுரை.

மலர் 1 | 3-4-63 | இதழ் 23

# குழந்தைகள் தலையில் கொள்ளி!

குழந்தைகளோடு விளையாடுவதென்றால் நமது தமிழ் மாநில அமைச்சர்களுக்குத் தனி இன்பம்.

குழந்தைகளோடு அவர்கள் கண்பொத்தி விளையாடினால் நாம் ஆத்திரப்படப் போவதில்லை. இளஞ்சிறார்களின் எதிர்கால வாழ்க்கையோடு அவர்கள் அடிக்கடி விளையாடுகிறார்கள்.

பெண்கள் வீட்டிலே கோலம் போட்டுப் பழகுவது போன்ற நிலையில் - அடிக்கடி கல்வியை அடித்துத் திருத்தி மாற்றிக் கொண்டிருப்பது முரட்டுத் தனமான விளையாட்டாகும்.

நாட்டின் வளர்ச்சியைப் பொறுத்து - தேவையெனில் கல்வியில் சில பல திருத்தங்கள் செய்யலாமே தவிர - ஓயாமல் மாற்றம் செய்து கொண்டிருப்பது செடியை வேரோடு பிடுங்கி வெந்நீரில் அலசுவது போன்ற வேலையாகும்.

புதிய அமைச்சரவை ஏற்படும்பொழுது ஒவ்வொரு கல்வியமைச்சரும் அவரவர்கள் விருப்பத்திற்குத் தக்கபடி கல்வியை மாற்றியமைக்க விரும்புகிறார்கள்.

அவர்கள் பரிசோதனைக்கு குழந்தைகள் தானா பலியாக வேண்டும்.

ஆண்டுக்கொருமுறை கல்வித் துறையில் புதிய கண்டுபிடிப்புகள் புகுந்து இளந் தளிர்களின் உயிரை வாங்கிக் கொண்டிருக்கிறது.

கல்வியமைச்சர் அமெரிக்கா சென்று வந்தால் அங்கே உள்ள கல்வியின் தரத்தை இங்கே புகுத்திப்பார்க்க ஆசைப்படுகிறார்.

கல்வி அதிகாரி இங்கிலாந்து சென்று திரும்பினால் அவர் கல்வி சம்பந்தமாக அங்கே கண்டு வந்த நிலையை இங்கே பரிசோதனை செய்து பார்க்க விரும்புகிறார்.

இப்படி அடிக்கடி மாற்றம் செய்து கொண்டிருப்பதால் கல்வியின் தரம் குறைகிறது என்பதை பொறுப்புள்ளவர்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டாமா?

வளர்ந்து வரும் பிஞ்சு இதயங்களில் அடிக்கடி குழப்பத்தை ஏற்படுத்துவது நல்லதல்ல.

தாங்க முடியாத சுமையை அவர்கள் தலைமீது ஏற்றி வைக்க வேண்டாம்.

11-ம் வகுப்பை எடுத்துவிட்டு பத்தாம் வகுப்போடு முடித்து - பின் பி. யு. சி. என்று இழுத்துச் சென்றார்கள்.

இப்பொழுது மறுபடியும் 11-ம் வகுப்பு கொண்டு வரப்பட்டிருக்கிறது.

பாடத் திட்டத்திலேயும் அப்படித்தான் - மூன்றாம் வகுப்பிலேயே சொல்லிக் கொடுத்துக்கொண்டிருந்த ஆங்கிலத்தை எடுத்துத் தொலைத்து - ஆங்கிலம் ஆறாம் வகுப்பிலிருந்து தொடக்கம் என்று திருத்தி அமைத்தார்கள்.

இப்பொழுது மீண்டும் மூன்றாம் வகுப்பிற்கே ஆங்கிலத்தை அழைத்து வந்திருக்கிறார்கள்.

கண்ணைக் குத்துவதற்குச் சமம் - கல்வியைக் குழப்புவது.

முன்பு அமுலிலிருந்து; பிறகு இடையிலே நீக்கப்பட்டு; பின்னர் மீண்டும் புகுத்தப்பட்ட வடிகட்டும் முறை இப்போது மறுபடியும் ஒழிக்கப்பட்டிருக்கிறது.

முன்பு இந்தித் தேர்வு எழுத வேண்டுமென்ற நிலை இருந்து அது மாற்றப்பட்டது. பின் அதில் பாஸ் மார்க் வாங்க வேண்டிய அவசியமில்லை. ஆனால் பெயருக்கு எழுதவேண்டும் என்று கட்டாயப்படுத்தினார்கள். பிறகு இந்தித் தேர்வு கேலிக் கூத்தாகிவிட்டது. இந்தித்தேர்வன்று மாணவர்கள் வெள்ளைப் பேப்பரை மடித்துவைத்துவிட்டுப் போய்விடுகிறார்கள் ஆகையால் இந்தியில் பரிட்சை இல்லையென்று அறிவித்தார்கள். அறிவித்து ஒரு திங்கள் கூட முடியவில்லை. அதற்குள் இந்தியில் தேர்வு கட்டாயம் எழுதவேண்டும் மேலே இருந்து உத்திரவு வந்துவிட்டது என்று உயிரைவிட்டு அலறுகிறார்கள்.

இந்த ஐந்தாண்டிற்குள் கல்வித்துறையில் எத்தனை மாற்றங்கள்- எத்தனை திருத்தங்கள்.

உங்கள் அரசியல் விவகாரங்களைக் கல்வியிலே போட்டுக் குழப்பி - குழந்தைகளின் எதிர்காலத்தில் கொள்ளி வைக்காதீர்கள்.

உங்கள் பரிசோதனைகளுக்குச் சின்னஞ்சிறு மலர்களைக் கசக்கிப் பிழியாதீர்கள்.

இந்த ஆண்டு எடுத்திருக்கும் முடிவாவது முடிந்த முடிவாக இருக்கட்டும். குழப்பம் நீங்கட்டும். கல்வி பிழைக்கட்டும்.

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

அது சமயம், தங்கக் கட்டுப்பாடினால் பாதிக்கப்பட்ட திருச்சி நகரத்திலுள்ள வியாபார சங்கங்கள்-தொழிலாளர் சங்கங்கள் (மொத்தம் 8 சங்கங்கள்) சார்பில் தங்களது குறைகளை நிவர்த்திக்குமாறு கோரும் மனு ஒன்றை முதலமைச்சர் காமராசரிடம் கொடுப்பதற்காக காலை ஒன்பது மணிக்கு திருச்சி பெரிய கடை வீதி ஷராப் ஜுவல்லரி அசோஷியேஷனிலிருந்து ஊர்வலமாகப் புறப்பட்டனர்...ஊர்வலத்தினர் கடும் வெயிலில் தென்னூர் வழியாகச் சென்று கொண்டிருந்தபோது தில்லை நகர் அருகே முதல் அமைச்சரது கார் வந்தது. அதைக் கண்ட சிலர் முதலமைச்சரது கார் அருகே சென்று "எங்களைக் காப்பாற்றுங்கள்; வேலையில்லாதவர்களுக்கு வேலை வாங்கிக் கொடுங்கள்" என்று கேட்டனர்.

உடனே முதலமைச்சர் காரை விட்டுக் கீழே இறங்கி, **அப்துல் ஹக்கீம்** என்ற முஸ்லீம் தோழரைப் பார்த்து "நீ தான் தலைவனா?"-என்று அவரது இருகன்னத்திலும் ஓங்கி அறைந்துகீழே அமுக்கித் தூக்கிவிட்டு-"இவர்களை எல்லாம் கவனித்துக் கொள்ளுங்கள்" என்று போலீசாரிடம் கூறிவிட்டு காரில் ஏறிப் போய்விட்டார்."

இது அறிக்கையின் ஒரு பகுதி—

"எங்களைக் காப்பாற்றுங்கள் -வேலை வாங்கிக் கொடுங்கள்" அமைதியாகக் கேட்டுக்கொள்ளப் பட்ட வேண்டுகோள் இது. இந்தக் கேள்வி காமராசரை எப்படித்தான் குத்திக் குடைந்ததோ நமக்குத் தெரியவில்லை. கன்னத்தில் ஓங்கி அறைந்துவிட்டு - கவனிக்துக்கொள்ளும்படி எச்சரிக்கை செய்து காரில் பறந்திருக்கிறார் காந்தியின் வாரிசு.

துருக்கிப் பிரதமர் மெண்டரசுக்கும்-காமராசருக்கும் ஏதாவது வித்தியாசம் தெரிகிறதா?

இவர்கள் ஜனநாயகத்தை எப்பொழுது பாடை கட்டி வேக வைத்தார்கள்,

காமராசர் என்ன - பௌலாவின் உருவமா? லூயியின் அவதாரமா? ஜார் மன்னன் சந்ததியா? மெண்டரசின் மறு பிறப்பா? இல்லையே- அவர் சத்தியமூர்த்தியின் சீடர் என்றல்லவா சொல்லுகிறார்கள். காந்தியின் வாரிசு என்றல்லவா புகழாரம் சூட்டுகிறார்கள். ஏழையின் முகம்பார்க்கும் கருணாமூர்த்தி என்றல்லவா ஏற்றி வைத்திருக்கிறார்கள். அந்தப் ஏழைப் பங்காளர் அல்லவா காப்பாற்றுங்கள் என்று கேட்ட தோழரின் கன்னத்தில் அறைந்திருக்கிறார்.

அணைக்க வேண்டிய கரம் அடித்திருக்கிறது. பிரச்சினைகளைதீர்த்து வைக்க வேண்டிய முதலமைச்சர்' பெரும்புயலை உருவாக்கி விட்டிருக்கிறார்.

"கேளுங்கள் கொடுக்கப்படும் - தட்டுங்கள் திறக்கப்படும்" இது ஏசு பெருமானின் இதயமொழி. இங்கே-கேட்டால் அறைவிழுகிறது. தட்டினால் இறுக்கமாகத் தாள் போடப் படுகிறது.

காரணம் இது ராம ராஜ்யம் என்பதாலா?

குறைகளை எடுத்துச் சொன்னால் கன்னத்தில் அறை விழுமோ என்ற பயத்தை மக்களுக்கு ஏற்படுத்துவது நல்லதல்ல.

அந்த சர்வாதிகார முரட்டுத் தனம் திருச்சியோடு ஒழியட்டும். காந்தியின் புனிதக் கொள்கை நாட்டிலே தழைக்கட்டும்.

## துணைத்தேர்தல் வருகிறது! தமிழ்த் துரோகிகளும் வருவார்கள்!

### அன்னையின் வாய்க்குப் போட்டார் பெரிய பூட்டு! அவருக்கா உங்கள் வோட்டு?



**கல்லூரிகளில் தமிழ் பயிற்சிமொழி பற்றி முடிவான திட்டம் இல்லை! இந்திக்குக் கொடி பிடிக்கிறார் இங்குள்ள மந்திரிமார்- இந்த நிலையில் பண்டிதரைக் கூட்டிவந்து வோட்டுக் கேட்கப் போகிறார்கள்- நாட்டோரே! நல்லவரே! உங்கள் தீர்ப்பு என்ன ? தமிழ் அன்னையின் வாய்க்குப் போட்டாரே பெரிய பூட்டு! அவர்களுக்கா உங்கள் வோட்டு !**

# அணைக்கவேண்டிய கரம் அடித்ததாம்!

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

"ரொட்டி. ரொட்டி, ரொட்டி வேண்டும்"

"ரொட்டி வேண்டுமா? பசிக்கிறதா உங்களுக்கு? போய்ப் புல்லைத் தின்னுங்கள்"-என்று திமிர்க் கூச்சல் போட்டுவிட்டு மலர் தூவியிருந்த மஞ்சத்திலே போய் விழுந்தான். அங்கே அவனுக்குப் பழரசமும் – பவள இதழும் காத்துக் கிடந்தன.

குடல் கருகி புழுவாய்த் துடித்துக் கொண்டிருந்த மக்களை பௌலனின் வெறித்தனமான பேச்சு புலியாய் மாற்றி வைத்தது. உணர்ச்சிப் பிழம்பாகி மக்கள் எரிமலையாய், புயலாய், பூகம்பமாய் அரண்மனைக்குள் பிரவேசித்தனர். காமரசக் களியாட்டத்தில் கண் மயங்கிக் கிடந்தான் பௌலன். ஆத்திரங்கொண்ட மக்கள் அவனை நகரத்தின் முக்கிய பகுதிக்கு இழுத்துவந்தனர்.

கூட்டத்தில் ஒருவன் பௌலனின் வாயில் புல்லைத் திணித்து –"வயிற்றுப் பசிக்கு ரொட்டி கேட்ட எங்களைப் பார்த்து புல்லைத் தின்னுங்கள் என்று திமிரோடு சொன்னாயே-இப்பொழுது நீயே சுவைத்துப் பார்த்துச் சொல்! எப்படியிருக்கிறது புல்?" என்று பௌலனின் பிடரியைத் தூக்கிப் பிடித்துக்கொண்டு கேட்டான். பௌலன் விழிபிதுங்கக் கூச்சலிட்டான்.

பசிக்குணவு கேட்டு வந்தனர் மக்கள்! மமதையோடு பதில் சொன்னான் பௌலன். பிறகு அவன் பட்டபாடு...

பொற்கொல்லர்கள் திருச்சியிலே காமராசரைச் சந்தித்து "நாங்கள் பட்டினியால் செத்துக் கொண்டிருக்கிறோம் எங்கள் பிரச்சினையைச் சற்று அனுதாபத்தோடு கவனியுங்கள்" என்று கோரிக்கை மனுவைக் கொடுத்தபோது-காமராசர் பொறுப்பற்ற முறையில் கோபமாகப் பேசினாராம்.

உதட்டளவு ஜன நாயகம் கூட அங்கே ஓடி மறைந்திருக்கிறது.

சர்வாதிகாரத்தின் தலைமகனைப் போல் அவர் சினங்கொண்டு சீறியிருக்கிறார்.

"நான் கடவுளுக்குத் தலைவன்-இன்னும் சொல்லப் போனால் நான்தான் கடவுள்! எந்த சாம்ராஜ்ய மன்னர்களும் என்னை அசைத்துவிட முடியாது. நான் அதிகம் பேசமாட்டேன்; என்பார்வை ஒன்றே போதும் எதிரிகள் பொசுங்கிச் சாம்பலாவதற்கு. போராட்டப் புயல்களைக் கிளப்பிவிடுவதாலோ புரட்சி வெடி குண்டுகளைத் தூக்கிப்போடுவதாலோ நான் பயந்துவிடமாட்டேன்-நான் கடவுளுக்குத் தலைவன்-நான் தான் கடவுள்" இப்படிச் சர்வாதிகார வெறிபிடித்துப் பேசியவன் பிரஞ்சு மன்னன் **லூயி**!

கோரிக்கை மனு கொடுத்த பொற்கொல்லர்களிடத்தில் காமராசர் சொன்ன பதில் லூயி மன்னன் குரலைத்தான் கணீர் கணீரென்று ஒலித்திருக்கிறது.

ரஷ்ய மன்னன் **ஜார்** என்பான் மக்களை ஆட்டுமந்தைகளாகக் கருதியவன். ஈவிரககமில்லாமல் அவர்களைக் கொடுமைப் படுத்தியவன். பசி தாளாமல் மக்கள் பட்டினியால் செத்துக்கொண்டிருக்கிறார்கள் என்ற செய்தி கேட்டு சிரித்து மகிழ்ந்தான்; கொடுமைக்குக் கொடி போட்டு வாழ்ந்த கொடுங் கோலன் **ஜார் மன்னன்.**

சண்டாளன் ஜார்மன்னனுடைய கல்மனம் காமராஜர் இதயத்தோடு இணைக்கப்பட்டிருக்குமோ என்பது நமக்குச் சந்தேகமாக இருக்கிறது!

—

ஊர்வலத்திலே வந்துகொண்டிருந்த செயற்கை வைரக்கற்கள் வெட்டும் தொழிற்சங்கத் துணைத் தலைவர் **திருப்பதி செட்டியார்** பாதி வழியிலேயே மயக்கமுற்று கீழே விழுந்து இறந்து விட்டார் என்ற செய்தியை பொற்கொல்லர்கள் காமராசரிடத்திலே எடுத்துச் சொல்லியும்; அதைக் கூட அவர் அனுதாபத்தோடு கேட்டுக் கொள்ளாமல் மெத்த சினங்கொண்டு பேசியிருப்பது-ஜார் மன்னனின் கொடுந்தன்மை அவர் இதயத்திலேகுடி கொண்டிருக்கிறது என்பதைத் தான் காட்டுகிறது.

இன்னும் வரலாற்றில் இடம் பெறாத ஒரு சம்பவம்-துருக்கியில் நடைபெற்ற ஒரு வெறித்தனமான நிகழ்ச்சியை இங்கு குறிப்பிட விரும்புகிறேன். காரணம் திருச்சியில் நடைபெற்ற செயலுக்கும்-துருக்கியில் நடந்த நிகழ்ச்சிக்கும் சரியான ஒற்றுமை இருக்கிறது.

பரிதாப முடிவுக்கு ஆளாகிப் போன துருக்கிப் பிரதமர் **மெண்ட்ரஸ்**-அவர் பதவியிலிருந்த காலத்தில் ஒரு நாள் துருக்கிநகரின் முக்கிய வீதி வழியாகக் காரில் பவனிவந்து கொண்டிருந்தார். அப்பொழுது நூற்றுக்கு மேலான மாணவர்களைக் கொண்ட ஒரு அணி வகுப்பு **மெண்ட்ரஸ்** பவனி வந்த காரை நிறுத்தி அவரிடம் ஒரு கோரிக்கையைக் கொடுக்க முயற்சித்தது.

இதனால் ஆத்திரங்கொண்ட மெண்ட்ரஸ் காரை விட்டுக் கீழே இறங்கி அணிவகுப்புக்குத் தலைமை வகித்து வந்த மாணவர்கள் தலைவனை ஓங்கி அறைந்துவிட்டு காரில் பறந்துவிட்டார். அதன் பிறகு துருக்கிநகரெங்கும் கண்டன ஊர்வலம் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது! அது விரிவாக எழுத வேண்டிய பெரிய நிகழ்ச்சி.–

துருக்கி பிரதமர் மெண்ட்ரஸ் கையாண்ட முறையற்ற-தவறான செயலை நமது மாநில முதலமைச்சர் காமராசர் திருச்சி நகரில் கையாண்டிருக்கிறார்.


திருச்சியில் நடைபெற்ற சம்பவத்தை விளக்கி நமது எம். எல். ஏ. எம். எஸ். மணி தந்திருக்கும் அறிக்கையின் ஒரு பகுதியை இங்கு தருகிறேன்.

"தமிழக முதலமைச்சர் கனம் காமராசர் 23-3-63 அன்று திருச்சி தேவர் மன்றத்தில் காலை 9 மணிக்கு ஒரு நிகழ்ச்சியில் கலந்து கொண்டார்.

(3-ம் பக்கம் பார்க்க)

# அறிக்கை தருகிறார் எம். எஸ். மணி!



**ஊழலே! உதாசீனமே! தாமதமே! உன் பெயர்தான் சர்க்காரா?**

**–கே. ஏ. மதியழன் கேள்வி!**

"அமைச்சர் தந்திருக்கிற கொள்கைவிளக்க அறிக்கையில் அதிகாரிகள் மக்களிடம் மரியாதையாய்ப் பழகவேண்டும் என்று கூறப்பட்டிருக்கிறது. பொறுப்புணர்ச்சியுடன் நடக்காதவர்களைத் தண்டிப்பதாகவும் உறுதி கூறப்பட்டிருக்கிறது. ஆனால் இருக்கிற நிலைமை வேறு. சுருக்கமாகச் சொல்ல வேண்டுமானால்... ஊழலே. உதாசீனமே, தாமதமே உன் பெயர்தான் சர்க்காரா என்று கேட்கவேண்டிய நிலையில் இருக்கிறது. என்னதான் பொதுமக்களிடம் மரியாதை காட்ட வேண்டும் என்று சுற்றறிக்கை விட்டாலும் நடைமுறையில் அப்படி ஏதும் இல்லை.

அதிகாரிகள் கிடக்கட்டும் – எதிர்க்கட்சிகளிடம் அமைச்சர்கள் காட்டுகிற அலட்சியத்தை நீக்குவதில் கவனம் செலுத்தினால் இவர்களைப் பார்த்துக் கூட அவர்கள் பின் பற்றுவார்கள். லஞ்சப் பழக்கம் பற்றி நிதியமைச்சரிடம் ஒரு தடவை கேள்வி கேட்டபோது, 'லஞ்சப் பழக்கம் எங்கேதான் இல்லை! எல்லா இடத்திலும் இருக்கிறது' என்று அவர் பதிலளித்தார்.

ஆனால், ஆந்திர சட்ட மன்றத்தில் சஞ்சீவி ரெட்டியார் இந்த லஞ்சப் பழக்கத்தைப் பற்றிக் குறிப்பிடுகையில் பகிரங்கமாக ஒத்துக்கொள்ளுகிறேன். அதை நீக்க வழி காணப் போகிறேன்'' என்று உறுதி கூறினர். அந்தப் பதிலுக்கும் இங்குள்ளவர்கள் தரும் பதிலுக்கும் உள்ள தாரதம்மியத்தை அமைச்சர்கள் குறித்து வைத்துக்கொள்ளட்டும்.

ஊழல் பற்றி விவரம் இல்லாமல் அறிக்கை தரப்பட்டிருக்கிறது. யார் யார் என்ன குற்றத்திற்கு நீக்கப்பட்டிருக்கிருர்கள் என்று தெரிந்துகொள்ள சபைக்கு உரிமை இல்லையா? பாதுகாப்பு தவிர மற்ற ரகசியங்களை வெளியிட்டால் என்ன? கோயில்கள் ஆண்டவனைத் தொழும் இடமாக இல்லாமல் கலாச்சார இடமாக – சமுதாய கேந்திரமாக இருக்க வேண்டும். எங்கிருந்தோ வந்த ஏசுநாதரின் சீடர்கள் செய்த கல்விப் பணியால் நாம் மனிதர்களானோம்.

போக போக்கியங்களை விட்டு விடவேண்டிய மடாதிபதிகளுக்கு நஞ்சை புஞ்சை ஏன்? அத்தகைய மடாதிபதிகள் நிலத்துக்கு உச்ச வரம்புச் சட்டத்தில் விதிவிலக்குத் தருவது தவறு என்பதை தி. மு. கழகத்தின் சார்பில் எடுத்துச் சொல்கிறேன்.

**டில்லி சென்று தைரியமாக வாதிடுங்கள்.**

**–கலைஞர் மு. க. ஆலோசனை!**

"பொருளாதாரத் திட்டத்தை அகில இந்திய ரீதியில் வைத்திருக்கிற காரணத்தினல் தான் சில பிரதேசங்கள் பின் தங்கிய நிலையில் இருக்கின்றன. முன்னேற முடியாத காரணத்தை எடுத்துக்கூறும் போது அது எங்களால் மாத்திரம் சொல்லப்படுகிற கருத்துஅல்ல. அமைச்சராக வீற்றிருந்து, தற்சமயம் ஆளுங்கட்சி உறுப்பினராக இருக்கிற மதிப்பிற்குரிய ஓமந்தூர் ராமசாமி ரெட்டியார்-நேற்று அல்ல, சென்ற கிழமை அல்ல, 1955-ல் சொல்லியிருக்கிருர். "நம் ராஜ்யத்தில் எவ்வளவு வரிபோட முடியுமோ அந்த அளவுக்குப் போட்டாகி விட்டது. மத்திய சர்க்காரிடமிருந்து கிடைப்பது அதிகமாயில்லை. மத்திய சர்க்காரிடம் உதவி வேண்டும் என்று கேட்பது தமிழ் நாட்டைப் பொருத்த வரையில் குறைவு. தலைவிதி என்று நினைத்துக்கொண்டு நாம் சும்மா இருந்துவிடுகிறோம். மத்திய சர்க்காரிடம் இதை நாம் வற்புறுத்த வேண்டும். அழுகிற பிள்ளைக்குத்தான் ஏதாவது கிடைக்கும். ஆகையினல் தமிழ் நாட்டு மக்கள் அதிகக் கூச்சல் போடவேண்டும். அப்போதுதான் ஏதாவது கிடைக்கும். நமது மந்திரிகள் மத்திய சர்க்காரிடம் சண்டை பிடித்து வெற்றி காணவேண்டும்'' என்று 1955-ம் ஆண்டு ஆகஸ்ட் 23-ம் நாள் ஓமந்தூர் ராமசாமி ரெட்டியார் கூறியிருக்கிருர்.




ராஜாசர் முத்தையா செட்டியார் காங்கிரஸ் கட்சிக்கு இன்றைக்கு மிகமிக வேண்டிய பிரமுகர். அவர் சொல்லியிருக்கிருர்- "இங்கே உட்கார்ந்து கொண்டு பேசிப் பிரயோசனமில்லை. டில்லிக்குச் செல்லுங்கள். அங்கு சென்று சண்டை போடுங்கள். டில்லிசலோ டில்லிசலோ'' என்று பலமுறை இந்த மன்றத்தில் குறிப்பிட்டிருக்கிருர். அவைகளையெல்லாம் எண்ணிப் பார்த்தால் நாங்கள் மாத்திரம்தான் சொல்லுகிறோம் என்பதற்கில்லை. அந்தந்தமாவட்டத்திற்கு, அந்தந்தப் பகுதிகளுக்கு இன்னின்ன தொழிற்சாலைகள் வேண்டும் என்று எதிர்க்கட்சியைச் சேர்ந்த அங்கத்தினர்களும் ஆளும் கட்சியைச்சார்ந்த உறுப்பினர்களும் உங்களைப் பார்த்து தைரியமாகக் கேட்கிற போது- அந்தத் தைரியத்தைப் பெற்று டெல்லி சென்று தெளிவாக தைரியமாக வாதாடி தமிழகம் வளம் பெறுவதற்கு இந்த அமைச்சரவை போராட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்."

**பொறுப்போடு பேசுங்கள்.**

**கே. ஆர். இராமசாமி வேண்டுகோள்.**

"கனம் காங்கிரஸ் அங்கத்தினர் பேசுகையில் 31, லட்சம் பற்றிய பைல் மாநகராட்சி மன்றத்தில் இருந்தது. அது இரண்டு வருடம் காணமல் போயிருந்து 41 லட்சமாக திருத்தி திரும்பி வந்தது என்று சொன்னர்கள். உள்ளபடியே மாநகராட்சி மன்றத்தில் குறைகள் சொல்ல வேண்டுமென்ருல் நிறைய சொல்லிக் கொண்டே இருக்கலாம்.

காங்கிரஸ்காரர்கள் ஆண்ட காலத்தில் ஏகப்பட்ட ஊழல்கள் இருந்தன. உறுப்பினர் சுதேசமித்திரன் பத்திரிகையில் வந்த கார்டூனைக் கூட எடுத்துச் சொன்னர். இவர்களைப் பற்றிச் சொல்ல வேண்டுமானல் பைரவர்களுக்கு ஒதுக்கிய 8 அணு 4 அணுவைக் கூட அப்பொழுதிருந்தவர்கள் சாப்பிட்டார்கள் என்று மாநகராட்சி மன்றத்தில் உள்ள எங்கள் கட்சி உறுப்பினர்கள் கூடச் சொன்னர்கள், ஆகவே அந்தச் சர்ச்சையில் இறங்கத் தேவையில்லை.



அந்த பைல் எங்கேயும் யும் காணமற் போய்விடவில்லை. 31 லட்சம் ஒதுக்கப்பட்டது. 2 வருடம் கழித்து மவுண்ட்ரோடு முழுதும் விரிவு படுத்த வேண்டுமென்று சொன்னதால் 41 லட்சமாக மாற்ற வேண்டி ஏற்பட்டது. ஆகையால் எங்கேயும் காணமல் போகவில்லை. அவைகள் அப்படியே இருக்கின்றன. தயவுசெய்து இதை விசாரணை செய்ய தனியாக ஒரு குழுவை ஏற்படுத்துங்கள். தாமதத்திற்கு என்னகாரணமென்று விசாரணை செய்வோம். அதில் தவறு இல்லை என்ருல் எங்கள் மீதும், மாநகராட்சி மன்றத்தின் மீதும் குற்றம் சாட்டியவர்கள் மன்னிப்புப் பெற வேண்டும். குற்றம் இருந்தால் நான் மன்னிப்புப் பெறுகிறேன். இதற்கு நாங்கள் எப்பொழுதும் தயார். ஆகையால் ஆளும்கட்சி உறுப்பினர்கள் பொறுப்புணர்ந்து பேச வேண்டுகிறேன்.

ஆ. மாதவன் எழுதிய

# அந்தரங்கம்

மனைவியல்லவா கிடக்கிறாள்? அவள் அப்படிக் கிடக்கும் போது, அவனுக்கு அந்த லயிப்பில் திளைப்பதற்கு மனம் வந்ததே? இரவு முழுதும் தூக்கமே வரவில்லை. இருமிக்கொண்டும் செருமிக்கொண்டும், புரண்டு புரண்டு படுக்கும், அவள் வாதனை, அவனுக்கு, காலைக் கட்டிக்கொண்டு நீந்தக் குதிப்பது போல அவஸ்தையாக இருந்தது.

அவள் பிரபஞ்சத்தின் மூலைக்குப் போய் விடுவாள் என்பது நிச்சயமாகத் தெரிந்துவிட்டது. பகல் முழுக்க அந்தப் பெண் கார்த்தி வந்திருந்தது. மருந்து ஊற்றிக்கொடுத்து தலையணைகளை மாற்றி வைத்துக் கொடுத்து, கஞ்சி எடுத்துக் கொடுத்து உதவியாக இருந்தாள். இரவில் அவள் வருவாளோ?

உதவி நடிகை பிழைப்பென்றால், இரவிலேதான் வேலை இருக்குமோ? கார்த்தி போய் விட்டு விடியத்தான் திரும்பி வருவாள். ஒரு உற்சாக மினுமினுப்பு, வேஷக் குலைவு, தூக்கச்சடைவு, உடன் எவனாவது தொத்திக்கொண்டு ஒருதுணை, இதுதான், கார்த்தி! பட்டுச் சேலையின் தளர்ச்சி, அலங்காரத்தின் அலட்சியம், அழகாக இருக்கிறோம் என்ற நிமிர்வு... அவன் அந்த கார்த்தியைப் பற்றி எண்ணினான். எண்ணும் தோறும், உள்ளே ஊறிக் கொண்டு வருகிறது. விக்க முடியாத மனச் சபலம். மனைவி நோய்ப் படுக்கையில் இருக்கிறாளே என்று தலை குனிகிறதா, என்ன? விவஸ்தை கெட்ட மனசு!

இரவு ரொம்ப நேரம் ஆகி விடவில்லை. அவன் ஒருமுறை வாசலுக்குப் போய்ப் பார்த்தான். எதிர்த்த வீட்டில் கார்த்தி இன்னும் வெளிக்கிளம்பியாகவில்லை. விளக்கு எரிந்து கொண்டிருந்தது. மண்ணெண்ணெய் விளக்குதான். ஆனால் பழைய கால சப்ரமஞ்ச விளக்குப் போல, சிவப்பும் ஊதாவும், கறுப்பும், மஞ்சளும், நீலமும், சேர்ந்து சில் சில்லாக கண்ணாடிக் குஞ்சங்கள் தொங்கும் விளக்கு. வாசலில் விழுந்த அந்த விளக்கொளி, தேர்க் கோலத்திற்கு, மெருகிட்டிருந்தது. மாக்கோலம் இன்னும் தெளிவாகத் தெளிகிறது. அந்தியில் இட்ட கோலம். மினக்கெட்டு, தெருவாசலில் இருந்து நாலு, பதினாறு, இருபது, என்று நிறைய புள்ளிகள் இட்டு, கோணல் வரிசையை அழித்து அழித்த வரிசையை குறுக்கி, குறுக்கிய வரிசையை இழுத்து, தேரெழுதி விட்டிருக்கிறாள், அவள். இந்தக் காலத்து சாதாரண ஒரு உப நடிகைப் பெண் எப்படியோ வாழும் ஒரு ஜன்மம், இப்படியெல்லாம் செய்வதென்றால்,...

அவன் உள்ளே திரும்பிவந்த போது, மனைவி, படுக்கையில் புறம் திரும்பி படுத்துக் கொண்டு, சுவரில் வெறும் விரலால் எதையோ எழுதிக் கொண்டிருப்பதைப் பார்த்தான். ஜுர வேகத்தில், இப்படி தொங்கும் கூண்டில் அடைபட்ட கிளி போல வளைத்து வளைத்து எதையெல்லாமோ செய்துகொண்டிருப்பது, அவள் வாடிக்கையாகிப் போய்விட்டது.


"மனோரமா! என்ன எழுதுகிறாய், சுவரில்? பேசாமல் தூங்குவதுதானே-?"

அவள் கேட்டதாக இல்லை.

பாறையினுள் உடைத்துக் கொண்டு, சிறு ஊற்று வழிவது போல் மனவிசாரம் எல்லாமாக, தொடுத்தித் தொடுத்தி ஓடும் புகை வண்டி போல, அழகற்றுப் போய், ஆனால் வியப்பே உருவாகி அவனுக்குத் தோன்றியது...

...வருகிறாள் உமைத் தேடி-
உன்
வாசலில் உருகி உருகி
நின்று
மணவாளன் நீயே என்று
-வருகிறாள் உமைத்தேடி.

கார்த்தியின் கணவன், டபராவிற்குள் வாய் வைத்து பாடுவது போல கம்பீரமாகப் பாடுகிறான். ஆனால், அந்தக் கம்பீரம் ராகவுமாக பொருந்தமாட்டேன் என்றது. எதிர்த்த வீட்டிலிருந்து அந்த அபஸ்வரம் சன்னமாககேட்டாலும், இங்கே விகாரமான அவன் மனதில் கல்லால் அடிப்பது போல இருந்தது.



ரதக்கிளி போல, அப்படி ஒரு அழகாக பெண்ணிற்கு, பேகடாராகத்தின் கடுமை போல ஒரு கணவன்! கதம்ப இசை போல- அந்தப் பெண் சிரித்து வழிவதற்கு, அவன் தான் காரணக்காரன்!

மனோரமா, உறங்கிப் போய் விட்டிருந்தாள். அவனுக்கு, இந்த கார்த்திப் பெண் மேல் மோகம் என்று சொல்லிவிடுவதற்கில்லை. ஆனால் சப்பாத்திக் கள்ளியின் மேல் ஆடை உலர்த்த முடியுமோ? என்ன விசாரத்துடனே, அவள் வீடேறி வந்து உதவி செய்துகொண்டு போகிறாள். ஊருக்கெல்லாம் சொந்தக்காரியாக இருக்கும் அந்தப் பெண்ணின் உதவியை பிரக்ஞையோடிருந்த போது, மனோரமா முகத்தைச் சுளித்திக்கொண்டுதான் ஏற்றுக் கொண்டாள்.

"இதையெல்லாம் நீ எதற்கு வந்து செய்யனும் கார்த்தி. நாங்கள் எப்படியோ பார்த்துக் கொள்கிறோம். உனக்கெதற்கு கஷ்டம்-?" என்பாள், மனோ.

"உங்களுக்கு இஷ்டமில்லையென்றால் வரவில்லையக்கா–"

கார்த்தி கத்தரிபோல் தான் பேசுவாள்.

"அதுக்கில்லை கார்த்தி உனக்கோ படப்பிடிப்பு அது இது வென்று பகலும் இரவும் வேலை. அதையெல்லாம் விட்டுவிட்டு வருகிறாயே என்றுதான் சொல்கிறேன்-"

'எனக்கந்த கஷ்டம் இல்லை-'

"சரி- உன் இஷ்டம்-"

"அப்படியென்றால் விட்டு விடுங்கள் நான் வந்து செய்வதைப் பற்றி இனிச் சொல்ல வேண்டாம்-"

இதென்ன- தொட்டால் சுருங்கி, உரிமை கொண்டாட்டம், என்று ஆரம்பத்தில் வியக்கத்தான் முடிந்தது அவனால். அப்பொழுது ஆசைக்கோ, அங்கலாய்ப்புக்கோ இடமிருக்கவில்லை.

பாம்பிற்கு புற்று ஆனது போல, மணக்க மணக்க அவள் வந்தவிதம், அவனுள் பரிதவிப்பை விதைத்தது! மனைவியல்லவா கிடக்கிறாள் என்ற வரம்பு முறை வழுவிக்கொண்டே போயிற்று-

வெளியே அவள் வீட்டு வாசலில், ஏதோ ஒரு கார் வந்து நிற்கும் ஓசை கேட்டது.

"சரி சரி, போய்விட்டு வா-" அவள் கணவனின் வழியனுப்பு வார்த்தை கேட்டது. கார் கதவு அடைபடும் ஓசை- சரேலென்று புறப்பட்டுப் போய் தொலைவில் மறைகிறது, அந்த ஓசை...

சற்றைக் கெல்லாம், தம்புருவில், மெல்ல சுருதிக் கூட்டும் ஓசை எதிர் வீட்டிலிருந்து வருகிறது. சுருதி ஷட்ஜத்திலிருந்து பஞ்சமத்திற்கு மாறுகிறது. ராகத்தின் பின்னணிவலை அமைந்து, கைகளைக் கோர்த்துக்கொண்டு ஆடும், தேவதாஸியரின் கால்ச் சிலம்பு போல கலகலக்கிறது. மெல்ல தொண்டையின் வளை நரம்பிலிருந்து குரல் புறப்படுகிறது.

(10-ம் பக்கம் பார்க்க)

# கன்னத்தைக் காட்டு என்றார் காந்தி!

# கன்னத்தில் அறைந்தார் காமராஜர்!

## சர்வாதிகாரி உருவில் சத்தியமூர்த்தியின் சீடர்!

## 'ஜார்' மன்னன் வழியில் செல்லாதீர்! ஜனநாயகத்தை கொல்லாதீர்!

## திருச்சியில் நடந்ததென்ன? திரைபோட்டு மறைப்பது ஏன்?

**சுட்டெரிக்கும்** கடும் வெயிலில் அவர்கள் ஏன் அத்தனை மைல் நடந்து அணி திரண்டு வந்தார்கள்?

நகை செய்யும் தொழில் நடத்தி வாழ்ந்து வந்த குடும்பங்களில் இன்று புன்னகை இல்லை. பசி, பட்டினி, பிணி எத்தனை நாளைக்கு அந்த வயிறு காயும். எத்தனை உயிர்களை அந்தச் சமுதாயம் பட்டினிப் பைசாசத்திற்குக் காவு கொடுக்க முடியும். இதற்கோர் முடிவு-விடிவு கிடையாதா?

வாழ்வைப் பறித்துக்கொண்டவர்களிடம் உயிர்ப் பிச்சைக் கேட்டது தவறா? ஊசலாடிக் கொண்டிருக்கும் ஜீவன்களைக் காப்பாற்றுங்கள் என்று கோரிக்கை கொண்டு வந்தது குற்றமா? நாட்டின் நாயகர் நமக்கு வழி காட்டுவார் என்று நம்பிக்கையோடு வந்தார்களே அது மாபாதகச் செயலா?

ஒருவரா - இருவரா? நூற்றுக் கணக்கானவர்கள் அல்லவா பலியாகியிருக்கிறார்கள். ஒரு சமுதாயமே அல்லவா புழு வாய்த் துடித்துக்கொண்டிருக்கிறது.

அவர்கள் சட்டம் கொண்டு வந்த மொரார்ஜி அவர்களையே சந்தித்து வாழ்வுக்கு வழி கேட்டார்கள். ராஜாஜி ஹாலிலே நின்றுகொண்டு மொரார்ஜி தேசாய் சொன்ன பதில் இது தான்- "உங்கள் பிரச்சினைகளை மாநில அமைச்சர்களிடம் சொல்லி முறையிடுங்கள். அதற்குப் பரிகாரம் தேடவேண்டியவர்கள் அவர்கள்தான்" என்று ஒரே குரலில் பதில் சொல்லி விட்டார்.

அதற்குப் பிறகுதான் பொற்கொல்லர்கள் மாநில அரசினரிடம் வாழ்வு கேட்டு மன்றாடிக் கொண்டிருக்கிறார்கள்.

தமிழ் மாநில முதலமைச்சர் முடங்கிப்போன தங்கள் வாழ்க்கைக்கு உயிர் கொடுப்பார் என்ற நம்பிக்கை அவர்கள் உள்ளத்தில் ஒலித்துக் கொண்டிருக்கிறது. கலங்கரை விளக்கமாய் வழி காட்டுவார் காமராஜர் என்று எண்ணிக் கொண்டிருக்கிறார்கள். பச்சைத் தமிழர் பட்டினி தீர பரிகாரம் சொல்லுவார் என்று எதிர் பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். அந்த நியாயமான நம்பிக்கையின் பேரொலியால் தான் திருச்சிக்கு விஜயம் செய்திருந்த காமராஜரைச் சந்திக்க அவர்கள் முடிவு செய்தார்கள்.

பொற்கொல்லர்கள் கோரிக்கையைச் சுமந்து கொண்டு அமைதியாக அணிவகுத்துப் புறப்பட்டனர். அவர்கள் இதயத்தில் எரிமலை குமுறிக் கொண்டிருந்தது. ஆனால் அது எந்த வடிவத்திலும் வெளிவரவில்லை.

இருள் சூழ்ந்து நிற்கும் தங்கள் பிரச்சினையில் விடிவெள்ளி தோன்றும், விசாரம் நீங்கும் வீட்டில் உலை கொதிக்கும் என்ற பேராவலில் - கால்ஓய கண், மயங்க, உடல் தளர திருச்சி நகர வீதியில் நடை போட்டு வந்தார்கள் பொற்கொல்லர்கள்.

வாழ்க்கையின் அடித்தளத்தில் நசிந்து கிடப்பவர்கள் அரசு பீடத்தில் அமர்ந்திருப்போரிடம் தங்கள் குறைகளை எடுத்துச் சொல்ல-முறையிட இதை விட வேறு என்ன நாகரிகமான வழி இருக்கிறது?

இந்த அறவழிச் செயலுக்கா அத்தனை பெரிய அவமதிப்பு! ஐயகோ! நாகரிகம் வளர்ந்து வரும் நாட்டில் நடக்கக் கூடாத காரியத்தையல்லவா நமது முதலமைச்சர் அங்கே முடித்து விட்டுக் கிளம்பியிருக்கிறார்.

தமிழகத்தின் வரலாற்றில் கரைபடியும் நிகழ்ச்சியை அல்லவா காமராசரின் கரம் துவக்கி வைத்திருக்கிறது.

பசிக்குச் சோறு கேட்ட பஞ்சைகளிடம் அதிகாரத்தை வைத்துக்கொண்டு விளையாடியவர்கள் உச்சியிலிருந்து உருட்டி விடப்பட்டிருக்கிறார்கள் என்ற உண்மையைத்தான் வரலாறு பாடமாகச் சொல்லிக்கொண்டிருக்கிறது.

அதிகாரத்தை வாண வேடிக்கையாகப் பயன்படுத்தியவர்களின் பரிதாப முடிவைத் தான் அண்மையில் நடைபெற்ற திருச்சிச் சம்பவம் நமக்கு நினைவூட்டுகிறது.

பிரஞ்சு மண்ணின் கவர்னராக இருந்தவன் **பௌலன்** என்பான். அவனுக்கு நாட்டைப்பற்றிக் கவலையில்லை. மக்களின் நல்வாழ்வில் அக்கறையில்லை. பிரஞ்சு மண்ணில் பஞ்சம் தலைவிரித்தாடிய போது பௌலன் மதுக் குளத்தில் மூழ்கிக்கிடந்தான். மலரனைய மங்கையர்களின் புதுச் சுகத்தில் திளைத்திருந்தான்.

பட்டினியால் செத்துக் கொண்டிருந்த மக்கள் அரண்மனை நோக்கி திரண்டு வந்து கூச்சல் போட்டனர்.

இன்பவல்லிகளின் இன்னிசையில் லயித்துக் கிடந்த அவனுக்கு பராரிகளின் கூக்குரல் அவலமாக ஒலித்தது. குடிபோதையில் கோவைப் பழம் போல சிவந்திருந்த கண்களை அகல விழித்தபடி மேலங்கியைக் கூடப் போர்த்திக் கொள்ளாமல் மாடித் தளத்திற்கு வந்து ஆத்திரத்தோடு கேட்டான் "ஏன் கத்துகிறீர்கள்-என்னவேண்டும்?"

"எங்களுக்குப் பசிக்கிறது"

"பட்டினியால் செத்துக் கொண்டிருக்கிறோம்.

(4-ம் பக்கம் பார்க்க)



# சம்பளம் வாங்கிய தியாகிகளின் சங்கதி தெரியாதோ!

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

கடலூர்ச் சிறைக்குள்ளே கலகம் செய்த தலைவர்கள் யார் யார் என்பது 'புதிய பேச்சாளர்களுக்கும் புதிய சிறு கதை வீரர்களுக்கும் தெரிந்திருந்தால் புழுதி வாரியிறைக்க மாட்டார்கள். புடவைகளையும் புட்டிகளையும் கெட்டியாகப் பிடித்துக் கொண்டே அரசியல் பேசும் அந்தக் கன்னிப்பெரு மக்கள் இப்போதாவது தெரிந்து கொள்ளட்டும்.

கடலூர் சிறைக்குள் காவலுக்கு அடைபட்டிருந்த அனந்தன் நம்பியார், பி. ஆர். நம்பியார், டி. கே. கருணாகரன், ராமன் உன்னி, மதுரைக் கம்யூனிஸ்டுகளான கருப்பையா, சுப்பையா, ரத்தினம். பழனிச்சாமி, சுப்பிரமணியம், தங்கமணி, கோவையைச் சேர்ந்த பாண்டுரங்கம், கே. ராமசாமி, வாசு, ராமனாதபுரத்தைச் சேர்ந்த எஸ். ராமகிருஷ்ணன், காஞ்சீபுரம் பார்த்தசாரதி போன்றவர்கள் ஆயுதந்தாங்கிப் போராட்டம் நடத்திய நல்லறிவாளர்களாம். இவர்களிலே பலர் இன்றைக்கும் உயிரோடு தான் உள்ளனர்.

போலீசாரை எதிர்த்துக்கம்யூனிச வீரர்கள் தங்களைத் தற்காத்துக் கொண்டார்களாம்! தமது கௌரவத்திற்காகப் போராடினார்களாம். கலகம் என்று யாரும் சொல்லக்கூடாதாம். கம்யூனிஸ்ட் கட்சியின் பெயருக்கேற்ற முறையில், கிஸான் இயக்கப் பெருமையுடன் போராடினார்களாம்! அந்தக் கைதிகளின் சாதனை பெருமைப்படத் தக்கதாம். மகிமை பொருந்தியதாம்.

ஆண்களைப் போலவேதான் பெண் கைதிகளும் போலீசாரை எதிர்த்து அசாத்திய வீரத்துடன் போராடினார்களாம்! ஐந்து கம்யூனிஸ்ட் பெண் கைதிகள் வீராங்கனைகள்தான் நமக்கு ஆட்சேபனையில்லை. ஆனால் அந்தப் பட்டியலில் முன்னேற்றக் கழகத்தை எதிர்த்து முழக்கமிடுகின்ற முரட்டுப் பேச்சு சிவகாமிகள் பாப்பாக்கள் யாரையும் காணோம்.

ஆயிரக்கணக்கான கம்யூனிஸ்ட் கொரில்லாக்கள் கடலூர், சேலம், வேலூர், சென்னைச் சிறைகளில் அடைப்பட்டிருந்த போது, அனந்த நம்பியார்கள் கலகத் தளபதியாக படை நடத்திய போது அந்தக் கட்சியின் இன்றைய ரவுடிப் பேச்சாளர்கள் எங்கே போனார்கள்? காந்தன்கள் சொன்னது போல 'பிக்பாக்கெட் பிரதர்'களுடன் 'பிசினஸ்' நடத்திக் கொண்டிருந்தார்களோ? செருப்புத் திருடுவது போன்ற உயர்ந்த செயல்களுக்காக அலைந்தார்களோ?

சிறைகளில் ஆயிரக்கணக்கில் கம்யூனிஸ்டுகள் அடைக்கப்பட்டதால் இடநெருக்கடி ஏற்பட்டது. வசதியான இடங்கள் கேட்டு மதிப்பிற்கும் மாண்பிற்கும் உரிய மட்டரகக் கைதிகள் மந்திரி மாதவமேனனுக்கு மகஜர் கொடுத்தார்களாம். கைதிகளின் கோரிக்கைகளை உடனே எற்றுக்கொண்டு அவர்களிலே சிலரை வேறு சிறைக்கு அழைத்துச் செல்ல அதிகாரிகள் சென்றபோதுதான் கலகப் படை திரண்டது. எதிர்க்கும் போது தாக்குதல் நடத்திய போது துப்பாக்கிப்பிரயோகம் நடைபெற்றது. இருவர் கொல்லப்பட்டனர்.

மார்க்சீயத் தத்துவத்தின் மகிமையைப் பேசவில்லை எந்தக் கம்யூனிஸ்டும்! துப்பாக்கிகளையும் தோட்டாக்களையும் வீரத்தோடு எதிர்த்த கைதிகள் அடக்கப்பட்டிரா விட்டால் கடலூர் சிறையை உடைத்துப் புறப்பட்டிருப்பார்கள்! காவல் துறை அதிகாரிகளின் கழுத்தை நெறித்துக் கொல்ல முயன்ற ராகவய்யாவும் பணிக்கரும் கொல்லப்பட்டனர். கொட்டு முழக்கத்துடன் கொடியேற்றும் கொரில்லாத் தோழர்கள் கொள்கைகளையும் கொலை செய்தார்கள் கொடுமைகளின் காவலாளிகளாகப் பவனி வந்தனர்!

தமிழ் நாட்டு மக்கள் துணைக் கண்டத்தின் தெளிந்த அரசியல் வாதிகள். என்றும் இந்தத் துரோகச் செயல்களை மறந்து விட முடியாது!



## விவரமில்லாத அமைச்சர்கள்!

"சட்ட மன்றத்தில் மந்திரி பக்தவத்சலம் பேசும் பொழுது சென்ற ஆண்டு தற்கொலை செய்துகொண்டவர்கள் 6 ஆயிரம் பேர்; அதில் தீராத நோயினால், பணக் கஷ்டத்தால், அவமானப் பெயர் ஏற்பட்டதால், காதலில் தோல்வி அடைந்ததால், குடும்பக் கஷ்டத்தால், வேலையில்லாத் திண்டாட்டத்தால் இறந்தவர்களும் இருக்கிறார்கள்" என்றார். உடனே நான் எழுந்து "எனக்கு மற்றவர்களைப் பற்றிக் கவலையில்லை. வேலையில்லாத் திண்டாட்டத்தால் மட்டும் இறந்தவர்கள் எத்தனை பேர் அதைச் சொல்லுங்கள்" என்றேன். 'விவரம் இல்லை' என்றார் பக்தவத்சலம்.

விவரம் இல்லையா; விவரம் இல்லாத அமைச்சர்கள் இந்த நாட்டை ஆளுகிறார்களா? விவரம் உள்ளபடியே இல்லையா? இருக்கும்! சொல்லமறுக்கிறார்கள். சொன்னால் பக்கத்து நாட்டினர் பரிகசிப்பார்கள் என்ற பயத்தால் சொல்ல மறுக்கிறார்கள். ஆழமான கிணற்றை நாடிச் சென்றோர் - அகன்ற ஆற்றைத் தேடிச் சென்றோர்– ஒரு முழக் கயிற்றை நாடியவர்கள் - விஷத்தை-அதுவும் இல்லாவிட்டால் மூட்டைப் பூச்சி மருந்தை நாடியவர்கள் இந்த நாட்டில் இவ்வளவு பேரா?– என்று ஏளனம் பேசுவார்களே என்ற காரணத்தால்தான்-நேரடியான பதில் சொல்ல மறுக்கிறார்கள்.

விவரம்தான் இல்லை; கொஞ்சம் ஈர நெஞ்சோடு இரக்கத்தோடு பதில் சொல்லக்கூடாதா? முடியாவிட்டால் "ஐயோ, நாங்கள் என்ன செய்வோம்!" என்று எங்களுடன் சேர்ந்தாவது அழுங்கள்.

— மயிலையில் கலைஞர்.

கேரளக் கம்யூனிஸ்ட் சர்க்காரை எதிர்த்த போது கம்யூனிஸ்ட் மந்திரிகள்எப்படித் துப்பாக்கிகளைத் தூக்கி வேட்டையாடினார்களோ அப்படித்தான் காங்கிரஸ் மந்திரிகளும் செய்தனர்! 7-8-49 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' இதழில் "வேலூர் மத்திய சிறையில் 150 நாட்டுத் துப்பாக்கிகள் பிடிபட்டன. அவற்றைக் கம்யூனிஸ்டுகள் வெளியிலிருந்து வரவழைத்திருக்க வேண்டுமென்று நம்பப்படுகிறது" என்பதாகச் செய்தி வெளியிட்டது. எந்தத் தலைவரும் மறுக்கவில்லை. சிறையில் சமையல் காரியங்களுக்காக வைக்கப்பட்டிருந்த கத்திகளையும், மாமிசம் வெட்டும் அரிவாள்களையும் கைதிகள் தங்கள் விடுதலைக்குரிய கருவிகளாக எடுத்துக் கொண்டார்கள்.

தேகப்பயிற்சி செய்வதற்காகவும், சிறை மதில்களுக்கு சுண்ணம்பு பூசுவதற்காகப் பயன்படுத்தும் கம்புகளையும் பெரிய கழிகளையும் கம்யூனிஸ்டுகள் தங்கள் சிறைக் கலகத்திற்கு ஆயுதங்களாக எடுத்துக் கொண்டு தாக்கியிருக்கின்றனர். சில பயங்கரக் கைதிகள் போலீசாரின் துப்பாக்கிகளையே பறித்துக் கொண்டுள்ளனர். இந்த உண்மைகளைச் சொன்ன மந்திரி மாதவமேனனை 'முட்டாள்' என்று பட்டம் சூட்டினர்.

கம்யூனிஸ்டுகள் சட்டத்தை மதிக்கவில்லை உடைத்தனர், அவர்கள் பத்திரிகையே சொல்லும் வாசகம் "எல்லாச் சிறைகளிலும் காங்கிரஸ் மந்திரி சபையின் பாஸிஸ்ட் மிருகத்தனத்துக்கு எதிராக கம்யூனிஸ்ட் காவல் கைதிகளும் தோளோடு தோள் நின்று போராடினர். குமாரசாமிராஜா, கோபாலரெட்டி, மாதவமேனன் அண்ட் கம்பெனிக்கு அதுவே தகுதியான பதில்" என்பதாக எழுதிவைத்திருக்கிறது. காம்ரேடுகளின் காலித்தனச் செயல்களைப்பற்றி எந்தக் கம்யூனிஸ்ட் பத்திரிகையும் இப்படி எழுதவில்லை என்று எவராவது சொல்ல முன் வருவார்களா?

சகதிப்பத்திரிகையின் எழுத்தாளர்களும், சாக்கடைக் கட்சியின் பேச்சாளர்களும், புதிய செயலாளரும் சொல்லட்டும்.


கம்யூனிஸ்ட் தோழர்கள் மொட்டை யடித்துக்கொள்ள முன் வருவார்களானால், கட்சியை விட்டு விலக்குகிறோம் என்று தெரிவித்து விடுவார்களானால், **'தென்னகத் தலைவன்'** சொல்லுவது பொய்யான செய்தியென்று உறுதிப் படுத்திவிடுவார்களானால், பத்திரிகையின் பெயரும், இதழும் தேதியும், ஆசிரியரும், வெளியிடப்பட்ட இடமும், அச்சிட்டவர் விலாசமும் அறிமுகப் படுத்தப்படும்!

சிறையிலே கலகம் செய்தவர்கள் தண்டிக்கப்பட்டார்கள். சதியிலும் சகதியிலும் புரண்டவர்கள் சங்கடப்பட்டார்கள். கழகத்தைத் தூற்றும் காம்ரேடுகளே! உங்கள் கட்சிப் பத்திரிகை சொன்ன செய்திகள் உங்களுக்கே தெரியாதா? ஆம் என்றால் எங்களைப்பற்றிப் பேச, தூசனை சொல்ல உங்களுக்கு அருகதையுண்டா? மாயாண்டிகளே மறுத்திடுக!

## சண்டியர்ப் பேச்சு வீரர்களின் நடத்தைகள் புரியாதோ!

சைதைத் தொகுதி

## எங்கள்
## எம். எல். ஏ.
# முனு- ஆதி.



1946, 52, 57 தொடர்ந்தாற் போல் மூன்று பொதுத்தேர்தல் களிலும் காங்கிரஸ் வெற்றிக் கொடி நாட்டிய தொகுதி. ஏன் காங்கிரஸ் கோட்டை என்றே சொல்லுவார்கள்.

அது மட்டுமல்ல, 62 தேர்த லில் நின்ற காங்கிரஸ் அபேட் சகர் பேசிய பேச்சு இருக் கிறதே அதுவே எங்கள் ஆதி-அண்ணன் வெற்றிக்கு மூல காரணம்.

"என்னுடைய அரசியல்வாழ் வில் தேர்தலில் நின்று தோற் றுப் போனதே கிடையாது. இந்த அன்னக்காவடி ஆதியா? எம். ஏ. பி. எல். விநாயகத் திடம் நிற்பது, என்று தொகு தியில் எல்லாக்கூட்டங்களிலும் ஆணவத்தோடு பேசினர்.

ஆகவேதான் ஏறக்குறைய ஒரு லட்சம் வாக்காளர்களைக் கொண்ட சைதைத் தொகுதி மக்கள் தங்களுக்கு ஒரு அன் னக் காவடியையே தேர்ந் தெடுத்துக்கொண்டார்கள்.

ஆம்;எங்கள் தொகுதிப்பிரதி நிதி அன்னக் காவடிதான். எங் கள் தொகுதி எம். எல். ஏ. எங் களைப்போன்றே குடிசை வாசி தான். ஏழை, எளியவர்களின் உண்மை ஊழியன். எந்த நேரத்திலும் எப்பொழுதும் கூப்பிட்டவுடன் வரத்தயாரா யிருப்பவர்.

என்ன ஆதி அண்ணே எங்கள் கிராமப் பக்கம் வரவே காணோமே என்று கேட்டால்- "நான் என்றும் உங்கள் ஊழி யன். நீங்கள்தான் என்னைப் பயன்படுத்திக்கொள்ள வேண் டும்" என்பார்.

முனு - ஆதிக்கு என்னய்யா தகுதி இருக்கிறது, என்று கேட்ட காங்கிரஸ்காரர்களுக்கு நமது இயக்கத் தோழர்கள் அளித்த ஒரே பதில். தாம்பரம் நகர ஊராட்சி மன்றத் தலை வர், பரங்கிமலை ஊராட்சி ஒன் றிப்புக் கல்வி நியமன குழுத் தலைவர், போதுமா தகுதிக்கு.

திரும்ப ஏன் பதில் சொல்லு கிறார்கள் காங்கிரஸ்காரர்கள்.

சைதைத் தொகுதியில் உள்ள 57 ஊராட்சி மன்றங் களில் உள்ள எல்லா வீடுகளுக் கும் கால் நடையாகவே சென்று வாக்கு கேட்டவர் முனு-ஆதி அவர்கள்.

முழுப்பெயர் முனு-ஆதி, செல்லப் பெயர் ஆதி.

தொகுதியில் உள்ள பள்ளி களின் ஆசிரிய ஆசிரியை களுக்கு ஆதி என்றால் தெரியா தவர்கள் கிடையாது.

தேர்தல் போரில் தோல் வியே கிடைக்காத நெப்போலி யன் நான் என்று மார் தட்டிய விநாயகத்தைவிட 13,000 வாக் குகள் அதிகம் பெற்றுக்காட்டி னர். காங்கிரஸின் தோல்வி, இனி சைதைத் தொகுதி தி. மு. க. கோட்டை அதை உடைக்கஎந்தஉருவத்தில் யார் வந்தாலும் தோல்விகிடைப்பது உறுதி என்பதையே காட்டு கிறது.

முனு-ஆதி பார்ப்பதற்கு எளியவர். தோழர்களிடம் இயக் கப் பிரச்சினைகளைப் பற்றி ஆர் வத்தோடு விவாதிப்பார்.

குறைபாடுகளை உடனுக் குடன் கவனிப்பார்.

தொண்டமண்டலத்தின் இரு பிரதிநிதிகளில் ஒருவரான ஆதி அவர்கள், எங்கள் எம். எல். ஏ. என்று சொல்லிக் கொள்ளு வதில் நாங்கள் பெருமைப்படு கிறோம்.

கொள்கைக்காக வாழும் ஆதி அண்ணன் வாழ்க, அவர் தொண்டு வளர்க.

**- தாமரைச்செல்வி ராசன்**


**விரைவில் ஆரம்பமாகிறது!**

**'தென்னகத் தலைவ'னில் தேன்சுவை தொடர்கதை**

பண்பையும், பேசும் மொழியையும் காப்பது கணவனு, மனைவியா?

இதை நிறுத்துக் காட்டும் நெடுங்கதை

**"ஒரு கொடியில் இரு மலர்கள்"**

**எஸ். எஸ். தென்னரசு எழுதுகிறார்.**

படிக்கத் தவருதீர்கள்!


## தடை என்ன செய்யும்?

கல்லோடு கல்பாயும் காலம் போகிக்
கையோடு கைமோதும் நிலையு மாறி
வில்லோடு வில்பொருத அம்பை ஏவி
விளையாடி வெற்றிகொளும் நாளு மேகிச்
சொல்லோடு சொல்மோத மக்கள் நெஞ்சச்
சுனையூறும் கருத்தோடு கருத்து மோத
நல்லோர்கள் கண்டநெறி மக்க ளாட்சி
நடைபோடும் காலமிது, அறிவீர் நன்றே!

"மக்களென்ன? தெருநாய்கள்! என்றன் வாயில்
மலர்ந்ததுவே சட்டம்" எனச் சொன்னர் மாறி
மக்களினல் மக்களுக்காய் மக்க ளாட்சி
மணம்பரப்ப வேண்டுமெனும் லிங்கன் கொள்கை
தக்கதென நல்லோர்கள் கொண்டார்; ஆட்சி
தனக்காக மக்களிலர்; மக்கட்(கு) ஆட்சி;
தக்கதிது தீயதிது என்று தேருந்
தகுதியினை உரிமையினை உடையார் மக்கள்.

பேச்சுரிமை எழுத்துரிமை ஆட்சி யுள்ளார்
பிழைபட்டார் நெறிபிறழ்ந்தார் என்னுங் காலை
ஓச்சுகின்ற அரசுரிமை மாற்று கின்ற
உயருரிமை வாக்குரிமை இவைகள் எல்லாம்
மூச்சாகும் உயிராகும் மக்க ளாட்சி
முழுமையுறச் செழுமைபெற, பறிக்கப் பட்டார்
மூச்சற்ற உடலாகும் மக்க ளாட்சி
முதன்மையிடம் வல்லவர்க்கே மக்கட்(கு) இல்லை.

கொள்கைப் போர்ச்சந்தையிலே தீய கொள்கை
கொள்பவர்கள் இல்லாது சாகும், தூய
கொள்கைகளே விலைபோகும் மக்கள் நெஞ்சில்
குடியிருந்து செழித்தோங்கி வளரும்; உண்மை.
கொள்கையொடு கொள்கையினை மோத விட்டால்
குடியிருக்கும் இடம்மாறும் என்ப தாலே
கொள்கையினை அழித்தொழிக்கச் சட்டம் தீட்டல்
கோழைமுறை; குழிபுதையும் மக்க ளாட்சி.

மக்களுள்ளம் மலர்த்தோட்டம் என்றல் சட்டம்
மலர்வீசும் மணமாக இருத்தல் வேண்டும்
மக்களுள்ள மலர்த்தோட்டம் அழிக்குங் காட்டு
மாடாகச் சட்டமதைச் செய்தார் பாடை
மக்களுமிழ் எச்சலினல் நிறைந்த காதை
மறவாதீர்! அறம்வெல்லும், தோற்குந் தீமை,
மக்களுள்ளம் எனுந்தீயில் கருகும் தாளாய்
மடிந்துவிடும் சட்டமது; அறிவீர் நன்றே!

கருமுகிலா ஞாயிற்றின் ஒளியைப் போக்கும்?
காட்டாற்று வெள்ளமதைத் துரும்பா தேக்கும்?
பெரும்புயலைச் சிறுகுடையா தடுக்கும்? காற்றில்
பிய்த்தெறியப் படுமன்றே? கனலைக் கக்கும்
எரிமலையைக் குடநீரால் அணைப்போம் என்றே
எண்ணுபவர் தமையறிஞர் மூடர் என்பார்
வருந்தடையா கழகத்தை அழிக்கும்? கால
வரலாற்றில் விடுதலையைப் பொறிப்போம் யாமே!

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

எனக்கும் உனக்கும்
இசைந்த பொருத்தம்
என்ன பொருத்தமோ—
இந்தப் பொருத்தம்
உலகில் பிறருக்
கெய்தும் பொருத்தமோ...

பெரிய பெரிய எழுத்துக்களால் எழுதி அழிப்பது போன்ற அந்த முரட்டுப்பாடல் இரவின் அசந்தர்ப்பத்தில், பேய்த் துள்ளலாக அவனுக்குத் தோன்றியது. ஜன்னலை மூடிவிட்டு உறங்க முயன்றான், அவன்.

ஃ ஃ ஃ

கார்த்தி படியிறங்கி வந்து கொண்டிருந்தாள். இவளா கார்த்தி? பாதத்தை தொடுகிறது, பின்னல். கேவலம் இந்த உபநடிகைக்கு நெற்றியில் அந்த குங்குமப் பொட்டு எவ்வளவு அழகாக ஜொலிக்கிறது. எத்தனை பேர் அழிய அழிய இட்ட பொட்டோ? கண்ணும் பேசுகிறது, உதடும் பேசுகிறது. இதற்கெல்லாம் தானே அள்ளி அள்ளி கொடுக்கிறார்கள். மணக்க, மணக்க அத்தர் பூசிக் கொண்டு வரும் செருக்கிற்கும் வழியவழிய வெற்றிலை குழப்பிக் கொண்டு வரும் அழு மூஞ்சிக்கும், சிரிக்கச் சிரிக்க புகை ஊதிக்கொண்டுவரும், அலட்சியத்திற்கும், இந்த அழகு அர்ச்சித்து எறியப்படுகிறதே...தூ..

"கார்த்தி நான் ரொம்ப நாளாக உன்னை ஒன்று கேட்க வேண்டுமென்றிருக்கிறேன்—"

மனோரமா உறங்கிக்கொண்டிருந்தாள். அந்த அத்தியாயம் கட்டாயம் முடியத்தான் போகிறது, என்பது அவனுக்குத் தெரியும். முடிவின் தலைப்பிலிருந்து அழிவும் ஆரம்பமாகிறது.

அவனுக்கருகில் வந்து நின்றாள், கார்த்தி.


நீங்கள் என்ன கேட்கப்போகிறீர்கள் என்பது எனக்குத் தெரியும். என்னிடம் எல்லோரும் கேட்கும் கேள்விகள்! ஆனால் இன்று உங்களுக்குப் பதில் சொல்வதிற்கில்லை.

கார்த்தி கத்திரி போல்தான் பேசுவாள். பேசிவிட்டு, குருவி பறந்ததுபோல இறங்கிப் போய் விட்டாள்.

அவன் நெஞ்சு அடித்துக் கொண்டது. கொஞ்சநேரத்திற்குப் பின்பு வாசலுக்குப் போய்ப் பார்த்தபோது அவள் வெளிக் கிளம்ப ஆயத்தமாகிக் கொண்டிருப்பது. தெரிந்தது. தொந்தியும், பரட்டையுமாக, அவள் கணவன். ஒரு முறை வெளியே வந்து, தெருவின் இரு மருங்கையும் பார்த்துவிட்டு, எதிர்வாயிலில்அவன்நிற்பதைக் கூட கவனியாததுபோல உள்ளே சென்றான்.

சிறிது நேரத்தில் பாட்டு ஆரம்பமாயிற்று. பேகடா ராகத்தின் தளிர் இழையைத் தொட்டுக் காட்ட அந்த முரட்டுக்குரல் ரொம்பவும் குனிந்து கொடுத்தது.

## கல்வி விளக்கை அணைக்காதீர்!



புதிய வரி விதிப்பினால் விலைவாசிகள் உயர்ந்துள்ளன. அதனால் மத்திய தர ஏழை மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். குறிப்பாக மண்ணெண்ணைமீது போடப்பட்டுள்ள அதிகப்படியான வரியால் ஏழைகளின் இல்லங்களில் இருள் சூழ்ந்து கிடக்கிறது. அதுமட்டுமல்ல மண்ணெண்ணை விளக்கேற்றி வைத்துப்பாடம் படித்துக் கொண்டிருந்த இளஞ்சிறார்களின் படிப்பையும் இந்த வரி பாதித்திருக்கிறது. மண்ணெண்ணை வரியால் நீங்கள் ஏழைகளின் வீட்டு விளக்கை மட்டும் அணைக்கவில்லை. கல்வி விளக்கையும் அணைத்திருக்கிறீர்கள்.

— பாராளுமன்றத்தில் க. ராசாராம்.

அவன் எதற்காகப் பாடுகிறான், என்று அவனுக்கே தெரியாது. ஒருவேளை அவள் புருஷன் என்பதை மறுப்பதற்காகப் பாடுகிறானோ?

வெளியே கார் வந்து நின்றது இந்த முறை காரை ஓட்டி வந்தது, ஒரு பெண். வழக்கம் போல, விடைபெறுதல், வழியனுப்புதல்-கார் போயிற்று. இரவு, தெரு வாசலில்குமைந்து கிடந்தது. வீட்டினுள்ளிருந்து அந்தசப்ரமஞ்சவிளக்கொளியும் அபஸ்வர நாதத்தின் அவலக் குரலும், வெளியே இறைந்தன.

மனைவியை நோய்ப் படுக்கையில் விட்டுவிட்டு, கார்த்தியின் மோகத்தில் உறங்காத எத்தனையோ இரவுகளில் அதுவும் கலந்தது.

ஃ ஃ ஃ

"'கார்த்தி இன்று நான் விடுவதாக இல்லை. இனி என்னால் பொறுக்க முடியாது. இன்று என் கேள்விக்குப் பதில் தேவை...நீ யாருக்கெல்லாமோ கிச்சுக் கிச்சு மூட்டுகிறவள். நான் வெருகு பூனைபோல, இந்த அறையிலே மனைவியின் மரணத்தையுக்கண்காணித்துக் கொண்டு, உனக்காக காத்துக் கிடக்கிறேன். எட்டும் போதெல்லாம் நீ நழுவிவிடுகிறாய்... இன்று நான் தீர்மானித்து விட்டேன்......

முள்க் கம்பால் முகத்தில் அறைந்தாற்போல், வாசலில் மறித்த அவன் கைகளுக்கப்பால், அறையின்நெருக்கத்திலே கார்த்தி நின்று கொண்டிருந்தாள். நெற்றியில் இட்டிருந்த குங்குமம் பொங்கிய வியர்வையில் அழிந்து ஒழுகுகிறது. முன்நெற்றியில் படியாக் கூந்தல் சிலிர்த்துக் கொண்டு ஊசலாடுகிறது. உதடுகளும் கண் இமைகளும் படபடக்கின்றன.

"என்னை விட்டு விடுங்கள். உங்கள் கேள்விக்கு என்னிடம் பதில் இல்லை......என்னை விட்டு விடுங்கள். உங்கள் மனைவி... உங்கள் மனைவி...என்னை விட்டு விடுங்கள்......"

கார்த்தியை இப்படி அவன் கண்டதேயில்லை. வெட்டிவிடும் அல்லது அறுத்தெறியும் அவள் கத்திரி சுபாவத்திற்கு இந்த இரங்கல் பொருந்தவேயில்லை.

"கார்த்தி! என்னை ஏமாற்றி விட்டு. இன்று நீ நழுவிவிட முடியாது. எனக்கு, என் உள்ளே நீ மூட்டிவிட்ட அந்தரங்கத்திற்கு இன்று பதில் வேண்டும்—"

அவன் நெருக்கம், அவள் முகத்தருகே நெருப்பாக கனன்றது. கார்த்தி திமிறினாள்... கட்டுகள் இறுகிற்றேதவிர விடுபடுவதாக இல்லை. வளைய வளைய பிணைத்துக்கொண்டு, கட்டுகள் இறுகியதும், தலையை தூக்கி ஆய்ந்து கொத்தப்போகும் பாம்பின் உக்ரம், அவன் விழிகளிலே மின்னிற்று.

"என்னை விடுங்கள்...என்னை விட்டு விடுங்கள்......" அவள் குரல் இரங்கிற்றே தவிர, அவனதுவன்மைதளர்வதாக இல்லை. அவள் முகமும் கைகளும் நெஞ்சுத் துடிப்பும் அவன் இறுக்கத்தில் வசமாக சிக்கிக்கொண்டன...எண்ணிச் சில கணப் பொழுதுகளில் மூச்சுகளும், பெருமூச்சுகளும் தான் பேசிற்று......

இனி அவளால் முடியாது என்று அவன் எண்ணி, சற்றே நயந்த ஒரு விநாடியில் திமிறிக் கொண்டு அவள் வெளியே பாய்ந்து விட்டாள்.

இரையை நழுவவிட்டு விட்ட வேழம்போல, அவன் சமைந்து நின்றான்.

எதிர்சாரியில் வீட்டினுள் நுழைந்து கதவிற்கப்பால் மறைவதைஅவன்பார்த்துக்கொண்டு தான் நின்றான்.

வழக்கம்போல் அன்றிரவு கார் வரவில்லை.அவள் கணவன் அந்த அபஸ்வர சங்கீதத்தைப் பாடவில்லை. சப்ரமஞ்ச விளக்கு உள்ளேதான் எரிந்தது. வெளி வாசல் சாத்தியாயிற்று. இரவு மட்டும், வழி காட்டியில்லாத கபோதி போல தடுமாறிக் கொண்டு கிடந்தது.

பாடாமல் பாட்டு வருமோ?
மீட்காமல் இசை பிறக்குமோ?
மூட்டமில்லாமல் குமுறிக்
கொண்டு வருமோ?

—ஆனால் அவன் அந்தரங்கத்தில் அடிப்படையற்ற அவலங்கள் ஒன்றன்பின் ஒன்றாக நிகழ்ந்து முடிந்து விட்டன. தண்டனை நிறைவேற்றப்பட்ட கழுமேடை போல நெஞ்சம் வெறிச்சிட்டிருந்தது.

உள்ளேபிரக்ஞையற்றமனைவி சுவரில் வெறும் விரலால் சித்திரம் தீட்டிக் கொண்டுதான் படுத்திருந்தாள். அவள் செய்வது என்னவென்பது அவளுக்கேத் தெரியாது. விளக்கொளியில் கைகளைத் தூக்கி, சுவரில் எழுதுகையில், தூக்கிய கைகளின் நிழல்கள், பக்கவாட்டில் விசித்திர உருவங்களாகதோன்றின.........

மனைவிக்கு அதுவே கடைசி இரவாக இருந்தது. அவள் பிரபஞ்சத்தின் மூலைக்குப் போயே போய் விடுவாள் என்பது நிச்சயத்திலும் நிச்சயமாகி விட்டது. இரவின் கடைசி யாமப் பொழுதில் வாய் ஓயாமல் எதையெல்லாமோ பேசிக் கொண்டிருந்தாள். விடியவிடிய பிதற்றல் இருந்தது. விடிந்து போய் பார்த்த போது அமைதியாக உறங்கிக் கொண்டிருந்தாள்-அமைதியான உறக்கம்.

ஃ ஃ ஃ

இங்கே பிலாக்கணம் எழ வேண்டிய நேரத்தில், எதிர் வீட்டில் கார்த்தியின் கணவன் சங்கீத சாதகம் செய்துகொண்டிருந்தான்......

எந்த வேடு கொந்து...
ஓ...ராகவா—பந்தமோதிரா
ஓ...ராகவா—ஆ...ஆ...

வெளியே வாசலில் வண்டியொன்று வந்து நின்றது.

இது வழக்கத்திற்கு விபரீதமாக இருந்தது. காருக்குப் பதிலாகபெட்டிவண்டி. கார்த்தி தனது தட்டுமுட்டு சாமான்கள் ஒவ்வொன்றாக அதில் கொண்டு வந்து வைப்பதும், திரும்பிப் போய் வேறொன்றைக்கொண்டு வருவதுமாக இருந்தாள்.

உள்ளே, திடீரென்று, அவள், கணவனின் பாட்டு நின்றது. மறுகணம் அவள் தம்புராவை வண்டியினுள் கொண்டுஎறிவதுபோல் வைத்து விட்டுச் சென்றாள்.

சற்றைக்கெல்லாம் கார்த்தி கணவனுடன் வெளியே வந்தவள் வீட்டுவாசலையும் பூட்டிக் கொண்டு இருவருமாக அந்த வண்டியில் ஏறிக் கொண்டார்கள். வண்டிக்காரன் சாட்டையைஓங்கி வீசினான், மாடுகள் மிரண்டுக் கொண்டு புறப்பட்டன......

அவன் உள்ளே மனைவியின் பிணத்தைவிட்டுவிட்டு கார்த்தி போவதையே பார்த்துக் கொண்டு நின்றான். அந்த பார்வையின் உக்ரம் கார்த்தியை என்ன செய்ததோ-வண்டியின் படுதாவை இழுத்து தன்னை மறைத்துக்கொண்டாள். வண்டி உருண்டு உருண்டு, தெருக் கோடியில் மறைந்தது. எதிரே பூட்டிய வீட்டின் இருட்டு சிரித்தது. வெளியேவாசலில்அவளிட்டத் தேர்க்கோலம் வண்டிச் சக்கரத்தில் அழிந்து கிடந்தது.

அவன் வீட்டினுள் படுக்கையில் மனைவியின் பிணம்தனித்து கிடந்தது. அவன் கார்த்திக்காக வாசலிலேயே நின்று கொண்டிருந்தான்!

எங்கள் கேள்வியும் ? உங்கள் பதிலும் !

## "குடும்பக் கட்டுப்பாடு பற்றி உங்கள் கருத்தென்ன?"

# நல்ல திட்டம் நாட்டுக்கு நன்மை!

# ஐயோ கெடுதி! இளமையின் வைரி!

## இரண்டு கருத்தில் மிதந்திடும் கொள்கை கு. க. திட்டம்!

**கேள்வி : குடும்பக் கட்டுப்பாடு பற்றி உங்கள் கருத்தென்ன ?**

ப: குடும்பக் கட்டுப்பாடு என்பது ஒவ்வொரு வீட்டிற்கும் நாட்டிற்கும் தேவைதான். கட்டுப்பாடு இல்லாமல் நாட்டில் நாளுக்கு நாள் மக்கட் தொகை அதிகரித்து பொருளாதாரத்துறையில் நாடு பின் தங்கி நசிந்து வருகிறது. நாட்டு மக்கள் அனைவரும் இத்தகைய நிலையைப் போக்க- குடும்பக் கட்டுப்பாடு செய்துகொள்ள வேண்டியது அவசியம்.

ஆனல் அரசாங்கம் குடும்பக் கட்டுப்பாடு என்பதன் பெயரால் அறுவை முறையில் இத்தகைய திட்டத்தைக் கொண்டு வருமுன் மக்களுக்குப் புரியும்படி இத்திட்டத்தை விளக்கிப் பிரச்சாரம் செய்ய வேண்டியது மிக அவசியம்.

குறிப்பாக கிராமத்து மக்களுக்குப் புரியும்படியாக சினிமாப்படம் எடுத்து கிராமத்து மக்களுக்கும் இந்தத் திட்டத்தை மிகவும் விளக்கமாக எடுத்துக் காட்டினல் இந்தத் திட்டம் வெற்றியடையும் என்பதோடல்லாமல் நாட்டு மக்களும் இத்திட்டம் பற்றி நன்ருக புரிந்து கொள்ளுவார்கள். மக்கள் இத்திட்டத்தை தெளிவாகப் புரிந்து கொள்ளுவார்களேயானல் குடும்பக் கட்டுப்பாடு திட்டம் நன்மையாக இருக்குமேதவிர தீமையாயிருக்காது.

அ. கோ. பாண்டியன்.
அய்யம்பேட்டை,

ப: தீமை என்பது என் கருத்து. எப்படி?..

இயற்கையின் சக்தியை அழிக்கும், பயங்கரச் செயல் இத்திட்டம். ஆட்சியாளர்கள் சொல்லும் காரணம் விசித்திரமானது. குடும்பக்கஷ்டத்தைப் போக்குவதற்கு கருத்தடை அவசியம் என்கிருர்கள். ஆண் பெண் உறவின் எழுச்சி, ஆசைக்குப் பல புதுமலர்களை கொடுத்து மகிழ வைக்கிறது. அந்த மணமலர்களை அழிக்க எண்ணுவது, வாழ முடியாதவர்களின் முட்டாள் தனமான செயல்.

மலரும் மக்கள் சமுதாயத்திற்கு குடும்பக் கட்டுப்பாடுத் திட்டம் தீமையை உண்டாக்கும் விசக் கருவி என்பதை அழுத்தம் திருத்தமாகச் சொல்லுகிறேன். ஏனென்ருல்... பூத்துவரும் புதிய சமுதாயத்தின் சிருஷ்டிகளை அழித்துவிட்டால்... நாட்டிலே எப்படி அறிவியக்கவாதிகள் தோன்ற முடியும்.

வருங்கால சந்ததியினர், உலகம் போற்றும் புகழ் படைத்தவர்களாக வரலாம்.

அப்படி வர இருக்கும், பேரறிஞர்களைத் தடுக்கும் தீயசக்திதான் குடும்பக் கட்டுப்பாடுத் திட்டம்.

உடற்கட்டுக் குலையாமல் இருப்பதற்கும், வறுமையைப் போக்குவதற்கும், குடும்பக்கட்டுப்பாட்டில், பலர் ஈடுபடுகிருர்கள். அவர்கள் கொலை பாதகர்கள். அரும்பும் மொட்டைக் கிள்ளியெறியும், கூர் முனைகள். சமுதாயத்தில் தோன்ற இருக்கும், மக்கள் தொண்டர்களை, நல்லறிவாளர்களை, தடுக்கும் பயங்கரவாதிகள்.

நாட்டிலே மக்கள் தொகை பெருகினல்தான் பயமில்லாமல், சுபிட்ச நிலைமையில் இருக்க முடியும்.

ஆகவே என்னைப் பொருத்தவரையில், குடும்பக் கட்டுப்பாடுத்திட்டம், தீமையானது. நன்மையைச் சாகடிக்கும், தொத்துநோய் போன்றது. இயற்கைக்குத் தீங்கிழைக்கும். துரோகம் கொண்டது. அத்திட்டத்திற்குத் தரும் ஆதரவுக் கரத்தை மடக்கிக் கொள்ள வேண்டியது பலரின் கடமையுமாகும்.

அன்பு மகிழ்நன்
(மு. மு. ஜெகபர்)
சென்னை-23

ப: குடும்பக் கட்டுப்பாடுத் திட்டம் மிகவும் மோசமானது என்பது என் கருத்து. அது மிகவும் மக்களைப் பாதிக்கிறது. இதனல் ஆணே - பெண்ணே சின்ன வயதிலேயே அறுவை செய்து கொள்ள வேண்டியதிருக்கிறது. சிலரின் உடலமைப்பு இந்த அறுவைச் சிகிச்சையைத் தாங்கிக் கொள்ளும் சக்தி இழந்து பாதிக்கப்படுகிறது.

எங்கள் வீட்டுக்குப் பக்கத்து வீட்டுக்காரர் ஒருவர் - அவர் இந்த முறையில் வைத்தியம் செய்து கொண்டதால் இப்போது மிகவும் பலவீனம் அடைந்து உடல் நிலை பாதிக்கப்பட்டு, எந்த வேலையும் செய்ய முடியாமல் கஷ்டப்படுகிருர். அவர் சம்பாத்தியத்தில் தான் அவர் குடும்பம் பிழைக்க வேண்டும். ஆனல் தொழில் செய்ய அவரால் முடியவில்லை.

ஆகையால் அரசாங்கத்தின் இந்தக் குடும்பக் கட்டுப்பாடுத் திட்டம் தீமையே தவிர நன்மை கிடையாது.

— ஏ. எம் சிவராமன்
பாலக்காடு

ப: குழந்தைகளே இந்நாட்டின் செல்வங்கள் என்று கொக்கரிக்கும் நேரு அவருடைய காலத்திலேயே இப்படியொரு கொலை பாதகத்தை உருவாக்கிக் கொடுத்திருக்கிருர் என்ருல் வெட்கமும் வேதனையும் படவேண்டியதாக இருக்கிறது.

கருந்தடையின் காரணமாக நாட்டில் நல்லவர்களும் கெடுவதுண்டு. குறிப்பாக ஒரு பருவம்அடைந்த பெண்ணை எடுத்துக் கொண்டால் தன்னுடன் பழக்கமான ஒரு ஆடவனுடன் சேர்ந்துகொண்டு இருவரும் கணவனும் மனைவியும் போல் பேசிவைத்துக்கொண்டு கருத்தடை அலுவலகம் சென்று பெண்ணுக்கு மாத்திரம் கருத்தடை செய்து வந்துவிட்டால் அவள் தன்னை விபச்சாரத் தொழிலில் ஈடுபடுத்திக் கொள்ள ஏதுவாகும்.

கருத்தடை செய்துகொள்வதால் கருவிலேயே பல ஆயிரம் உயிர்களைச் சிதைத்து விடுவதால் ஜன நெருக்கடி குறைவதாக வைத்துக்கொண்டால் கூட, அதே தருணத்தில் கருத்தடை செய்யாமல் பல ஆயிரம் குழந்தைகள் பிறந்து பெரியவர்களாகி நம் நாட்டிற்கு பெரியவர்களாகவும் விஞ்ஞானிகளாகவும் அரசியல் தலைவர்களாகவும் வரக்கூடும் கர்ப்பத்தடையின் காரணமாக இவர்களை இழக்க நேரிடும்.

கருத்தடையின் காரணமாக பிற்காலத்தில் நம் நாட்டிற்கு எதிரிகளால் ஏற்படும் தொல்லைகளை முறியடிக்க வீரர்கள் இல்லாமல் எதிரிக்கு நம் நாடு இடமளித்து நாம் அடிமைகளாக நேரிடும்.

கருத்தடை செய்துகொண்ட தம்பதிகள் இயற்கை அளித்த இன்பத்தைப் பூரணமாய் அனுபவிக்க முடியவில்லையே என்று வருத்தத்துடன் சொல்லுவதை கேள்விப்படுகிறேம்.

கருத்தடை செய்து கொள்வதால் நாட்டில் பெரும்பாலான ஆடவரும் பெண்டிரும் முறை தவறி நடக்க நேரிடும் ஆதலால் எவ்வகையிலும் நம் நாட்டிற்கு கருத்தடை அவசியமில்லை. குடும்பக் கட்டுப்பாட்டால் தீமையே என்பது என்கருத்து,

— அ. தேவராசன்
சென்னை-7,


### வீரகேசரி மாத்திரை

நித்திரையில் ஜீவசக்திகள் வெளியாவதைத் தடுத்து நரம்புகளுக்கு வலுவைக் கொடுத்து, ஜீவசக்தியை அதிகப்படுத்தி நீடித்து இருக்கவும், புத்துணர்ச்சியையும் அளிக்கும் சிறந்த மாத்திரை. (அனுபவமுள்ளது— நற்சாக்ஷிகள் பெற்றது)

**24—மாத்திரை ரூ. 6—00**
**50—மாத்திரை ரூ. 12—00**

(தேவைக்கு எழுதவும்):—சித்த வைத்திய பண்டிட்

**S. V. R. கண்டர். R. I. M. P.**

அரிசிப்பாளையம். லீ பஜார். P-O (சேலம் - 9.)

# கலைச்சோலை

## பல குரல் மன்னன்

### அரசியல் கதம்ப நிகழ்ச்சியில் அசகாய சூரர் ! நமதியக்கத் தோழர் இளைஞர் ! தோழர்களே பயன்படுத்திக்கொள்ளுங்கள் இவரை !

கருத்துக்களை எடுத்துச் சொல்ல எளிமையானதும் வலிமையானதும் ஆன கருவி, கலை. கழக கொள்கைகளைக் கலை வழியில் எடுத்துச் சொல்லும் பொறுப்பை ஏற்றுக்கொண்டுள்ளோருள் ஒருவரே, நண்பர் சேதுராசன்.

இவர் ஒரே மனிதர் தான்; என்றாலும் இவரது தொண்டை எல்லோரும் வியக்கும் வண்ணம் பத்தொன்பது குரல்களைப் பேசுகிறது.

இவர், சின்ன வயதிலிருந்தே இயக்கத்தில் ஊறியவர்; காசுக்காகக் கழகப் பாடல்களைப் பாடுபவர் அல்ல; கொள்கைக்காக ஊர் தோறும் முழங்கி வருபவர்; இவரது நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்வோர் குறைந்த செலவில் நிறைந்த பயனை அடைவர்.

பலகுரல்களில்பேசும்வன்மை மிக்கவர் இவர். அறிஞர்அண்ணா, கலைஞர் மு. கருணாநிதி, பெரியார் ஈ. வெ. ரா., ஜீவானந்தம், காமராசர் போன்ற பல தலைவர்களின் குரலில் அப்படியே பேசும் திறமை இவருக்குத் தனியுடமை. திடீரென்று, பாதை வழியே செல்பவர்களும், "அண்ணா பேசுகிறார் போலிருக்கிறதே! விளம்பரம் கூட இல்லாமல் அண்ணா அவர்கள் பேச வந்துவிட்டார்களா?" என்று வியந்து மேடைக்கருகில் வருவர்; வந்த பின்னரே "பேசுவர் அண்ணா இல்லை; அவரைப் போன்றே குரல் வளம் காட்டும் சிவகங்கைத் தோழர் சேதுராசன்தான் பேசிக்கொண்டிருக்கிறார்" என்றுணர்வர்.

கழகம் நடத்திய விலைவாசி உயர்வுக் கண்டன மறியலில் கலந்து சிறை ஏகியவர் இவர்; திருச்சி, மதுரைச் சிறைகளில் வாடிய தோழர்களிடம் அவ்வப்போதாகிலும் சிறிது மகிழ்ச்சி கிடைத்தது என்றால், அதற்குக் காரணம் இவரது பல குரல் வளம்தான்.

இருசிறைகளிலும் இருந்த கலைஞர் மு. கருணாநிதி, பேராசிரியர் க. அன்பழகன், புலவர் ஏ. கே. வேலன், மாவட்டச் செயலாளர்கள் எஸ். முத்து எம். சி., அன்பில் தருமலிங்கம் எம். எல். ஏ., எஸ். எஸ். தென்னரசு முதலிய பலரும் தோழரின் திறமை கண்டு வியந்தனர்; பாராட்டினர்.

ஏற்கனவே, இவரது திறன் கண்ட **புரட்சி நடிகர்**, இவருக்கு "பலகுரல் மன்னன்" என்ற பட்டம் வழங்கிச் சிறப்பித்துள்ளார்; தோழர் நீலநாராயணனும் புகழ்ந்துள்ளார்.

சிறை மீண்டபின் தன் திறமையைக் குழைத்து ஓரங்க நாடகங்கள் சிலவற்றை அமைத்துள்ளார். பொதுவுடைமையர் கொடுமைகள் விளக்கும் 'மீண்ட தண்டாயுதத்தின் மிருக வரலாறு' அவற்றுள் முக்கியமான நாடகம். அண்ணா, கலைஞர். பெரியார், கே.ஆர். இராம்சிங், டி. எஸ். பாலையா, சிதம்பரம் ஜெயராமன், சரோஜாதேவி முதலியோரின் குரல்களைக் கொண்டு சித்தரித்து இவர் ஒருவரே நடிக்கும் அந்நாடகம் தென் மாவட்டங்களில் தனிக் கவர்ச்சியைப் பெற்றுள்ளது. இந்நாடகத்திற்கான வரலாற்றைத் தொகுத்துத் தந்திருப்பவர் தோழர் கூடலரசன் ஆவார்.

தோழர் சேதுராசன் நிகழ்ச்சியை திருமண விழாக்களில் தேர்தல் காலங்களில் - கழகக் கூட்டங்களில் பயன்படுத்திக் கொள்ளலாம். பொதுமக்கள் இதுவரை கேட்டிராத புதிய விருந்து.

தோழர் சேதுராசனின் நிகழ்ச்சியை ஏற்பாடு செய்ய விரும்பும் கழகத் தோழர்கள் அவருடன் கீழ்க்கண்ட முகவரிக்குத் தொடர்பு கொள்ள வேண்டுகிறோம்.

எஸ். பி. சேதுராசன்,
3/353, வடக்கு வாடித்தெரு,
சிவகங்கை.
(முகவை மாவட்டம்)

பரிசுச் சிறுகதை முடிவு

# திருமணம்

ஆயிரக்கணக்கான நண்பர்களிடத்திலிருந்து நமக்குச் சரியான முடிவும் - வேடிக்கையான விளக்கமும் - விபரீதமான பதிலும் வந்து குவிந்தன. அதில் முதலில் கிடைத்த சரியான விடை தோழியர் ஏ. மார்க்கரட் அவர்களுடையது.

## 'திருமணம்' பரிசுச் சிறுகதை முடிவு!

"தம்பதிகளை இதில் கண்டு பிடிப்பது எளிது! காரணம், முதலில் சிவகாமிக்கும் அரசு நம்பிக்கும் திருமணம் என்று கூறிவிட்டு, பிறகு சிவகாமி வருவதால் இது வீரப்பர் பெண் அல்ல என்பது தெளிவாகிறது.

மேலும் 'வளர்ப்புப் பெண் சிவகாமி' என்று போட்டிருப்பது இம்முடிவை உறுதிப்படுத்துகிறது.

மேலும் பந்தல் அலங்காரம் வாசலில்தான் போடப்படும். தோட்டத்தில் நடைபெறுவதாகக் குறிப்பிட்டிருக்கிறது.

'அரசு நம்பி'யும் 'சிவகாமியும் - என்னும்போது அதுவும் மிகவும் வெளியாகிவிட்டது.

'தழைத்து இணைந்து ஆடி' - என்ற வார்த்தை இதை மேலும் வலிவடையச் செய்கிறது.

புயலும் மழையும் வந்தபோது மணமக்கள் வெட்டப்பட்டதாகக் கூறப்படுவது மேலும் சந்தேகத்தைத் தெளிவிக்கிறது.

'மணமக்கள் இறந்தும்கூட நம் குடும்பத்திற்குப் பயன்படுகிறார்கள்' - என்று சிவகாமி கூறுவது அந்த மணமக்களான் மரங்களைத் தவிர வேறில்லை.

ஊர் மக்கள் உள்ளூரச் சிரிப்பது, பக்தர் வீரப்பர் செய்த அரசமரம்-வேப்பமரம் திருமணத்தை எண்ணித்தான் எனவே மணமக்கள் - அரசமரம் - வேப்பமரம் தான்!"

மற்றும் நூற்றுக்கணக்கான நண்பர்களிடமிருந்து சரியான விடை வந்துள்ளது.

ஏ. மார்க்கரட்
c/o பி. பி. ராமசாமி,
சிறுகளஞ்சி,
ஊத்துக்குனி.


## எமது புதிய வெளியீடு !

## சாமுத்திரிகா லட்சணம்

(உடலமைப்பின் ரகசியங்கள்)

- தொகுத்து எழுதியவர் 'இந்திரன்'
- உச்சந்தலை முதல் உள்ளங்கால் வரை ஆண், பெண் ஆகிய இருபாலரின் அங்க அமைப்புகளும், அவற்றின் பலாபலன்களும் விரிவாக எழுதப்பட்டுள்ளன
- தன்னையும் பிறரையும் அறிந்து முன்னெச்சரிக்கையுடன் வாழ வழிகாட்டும் வாழ்க்கை நூல்.
- கைரேகை, சோதிஷம், ஓவியம் ஆகிய தொழில் துறையில் உள்ளவர்களுக்கு உற்ற துணை புரியும் உதவி நூல்.
- வியாபாரிகளுக்கு 25%. கழிவு தரப்படும்.
- விலை ரூபாய் 2—00
- தனிப்பிரதி தபால்மூலம் பெற விரும்புவோர் மணியார்டரில் ரூபாய் 2-75 அனுப்புதல் வேண்டும்.

வலம்புரிப் பதிப்பகம்
17, உஸ்மான் ரோடு :: சென்னை -17.


ஆசிரியர், வெளியிடுபவர்: ஜி. தினகரன், 31, பார்த்தசாரதிப்பேட்டைத் தெரு, சென்னை-6.
அச்சிடுபவர்: எஸ். சொக்கலிங்கம், பாரதம் பிரஸ், 14, உஸ்மான் ரோடு, சென்னை-17.